

LANKA Sathosa

ලංකා සතොස லங்கா சதொச

Lowest Price | Your Place

2017

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
ANNUAL REPORT

අභ්‍යන්තර වෙළඳ, ආහාර සුරක්ෂිතතාවය හා පාරිභෝගික සුබසාධන අමාත්‍යාංශය
உள்நாட்டு வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்புரி அமைச்சு
MINISTRY OF INTERNAL TRADE, FOOD SECURITY AND CONSUMER WELFARE

பொருளடக்கம்

	பக்க இலக்கங்கள்
தூரநோக்கு மற்றும் பணிநோக்கு	2
பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை	3-5
கூட்டுரிமை ஆட்சி	6
நிதிசார் சிறப்புக்கூறுகள்	7-8
கூட்டுரிமைத் தகவல்கள்	9
தணிக்கை அறிக்கை	10-15
நிதி அறிக்கைகள்	16-62

தூரநோக்கு

இலங்கையில் உண்மையான வாழ்க்கைச் செலவைப் பிரதிபலிக்கும், தேசத்திற்கான விலை நிர்ணயிப்போனாக இருத்தல்.

எமது பணிநோக்கு

வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், நாட்டின் பொதுமக்களுடன் கூட்டுரிமை சமூகத்தை தொடர்புறுத்தல், சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு (SMEs) தொடர்புகொள்வதற்கான வாய்ப்பொன்றை வழங்குதல் மூலம் திறமையான உயர்தர வாடிக்கையாளர் சேவையை வழங்குதல்.

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் பணிப்பாளர் சபையானது 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையினை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றது.

கம்பனியின் பிரதான செயற்பாடுகள்	இக் கம்பனியானது நுகர்வுப் பொருட்களின் சில்லறை மற்றும் மொத்த விற்பனையில் பிரதானமாக ஈடுபட்டுள்ளது.
நிதிக் கூற்றும் கணக்காய்வாளரின் அறிக்கையும்	நிதி விடயத்திற்கான பிரதிப் பொது முகாமையாளரினாலும், பணிப்பாளர்களினாலும் உரியவாறு ஒப்பமிடப்பட்ட பூர்த்திசெய்யப்பட்ட, 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களும் அதுபற்றிய கணக்காய்வாளரின் அறிக்கையும் இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன.
விற்பனைப் புறள்வு	இக் கம்பனியின் விற்பனைப் புறள்வானது 29,611 மில்லியன் இலங்கை ரூபா தொகையினைக் கொண்டது. (2016- 29,983 மில்லியன் இலங்கை ரூபா)
ஒதுக்குகள்	இக் கம்பனியின் ஒதுக்கானது 11.824 மில்லியன் இலங்கை ரூபாவைக் கொண்ட பற்றுமீதியினைக் கொண்டுள்ளது. (2016 – 9,041 மில்லியன் இலங்கை ரூபாவைக் கொண்ட பற்றுமீதி)
கூறப்பட்ட மூலதனம்	இக் கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் 894 மில்லியன் இலங்கை ரூபா தொகையினைக் கொண்டது. (2016- 894 மில்லியன் இலங்கை ரூபா)
மூலதனச் செலவினம்	ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன தொடர்பான இக் கம்பனியின் மூலதனச் செலவினமானது 910 மில்லியன் இலங்கை ரூபா தொகையினைக் கொண்டது. (2016- 351 மில்லியன் இலங்கை ரூபா)
கூட்டுரிமை நன்கொடை	இக் கம்பனியானது 0.465 மில்லியன் இலங்கை ரூபா தொகையினைக் கொண்ட நன்கொடைகளை அளித்துள்ளது. (2016- 1.831 மில்லியன் இலங்கை ரூபா)

நியதிச்சட்டக் கொடுப்பனவு

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வருமான வரிச் சட்டத்தின் (திருத்தப்பட்ட) 07 (ஏ) ஆம் பிரிவின் கீழ் வருமான வரியிலிருந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து இக் கம்பனிக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கு அல்லது ஊழியர்கள் சார்பில் நிலுவையாகவுள்ள சகல நியதிச்சட்டக் கொடுப்பனவுகளும் அறிக்கையிடல் திகதி சார்பில் செய்யப்பட்டுள்ளன அல்லது அட்டுறுவாக்கப்பட்டுள்ளன.

பங்கு தொடர்பான தகவல்கள்

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான பங்கு தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

பங்கு உரிமையாளர்கள்	பங்குகளின் எண்ணிக்கை	பங்கின் உடைமை%
டொன் மஹிந்த கம்மம்பில	1	0%
ரொஷானி ரத்நாயக்க	1	0%
சஜித் ருச்சிக்க ஆட்டிகல	1	0%
ஹெட்டிஆரச்சிகே லெஸ்லி திசெர	1	0%
சிறிபால விரித்தமுல்ல	1	0%
நிஹால் ஜயவர்த்தன	1	0%
அஜித் நிவாட் கப்ரால்	1	0%
கூட்டுரிமை மொத்தவிற்பனைத் தாபனம்	2,279,884	3%
திறைசேரிச் செயலாளர்	87,095,381	97%

தொடர்புபட்ட தரப்பினர் பற்றிய கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புபட்ட தரப்பினர் பற்றிய கொடுக்கல் வாங்கல்களானவை நிதிக் கூற்றுக்களிலுள்ள 27 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபை

கீழே பட்டியற்படுத்தப்பட்ட பணிப்பாளர்களானோர் மீளாய்வின் கீழான ஆண்டு பூராகவும் இக் கம்பனியின் பணிப்பாளர்களாக இருந்துள்ளனர்.

திரு. றொகந்த நெவிலி அந்தோனி அத்துகோரல– தலைவர்-சந்தைப்படுத்தல்

திரு. அஹமட் உஷ்சன் மொஹமட் ஜாசிர்– செயற்பாட்டு பணிப்பாளர்-கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

திரு.மொஹமட் ஹம்ஸா மொஹமட் ஷவ்ராஸ்– சட்ட வழக்கறிஞ்சர்

திரு. மொஹமட் றிஸ்வான் ஹமீம் –கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.

திரு.அருண பிரியதர்சன குரும்பலபிட்டிய – பணிப்பாளர்- தேசிய கணக்காளர் /திறைசேரி

திரு.ராஜலிங்கம் ருசாந்தன்– ஆணையாளர் – பொது நிறுவனதுறை/ திறைசேரி

திரு. ரணதுங்க ஆராய்ச்சிகே இந்திகா இராணி ரணதுங்க – பணிப்பாளர்- கூட்டுறவுத்துறை மற்றும் சட்டரீதியான வாரியங்கள் / கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு

திரு. அப்துல் ஹமீட் மொஹமட் அன்வர் - தலைவர்- CWE கட்டுமானங்கள் மற்றும் பொறியியல் தனியார் லிமிடட

திரு. தென்னக்கோன் முடியன்சேலகே குமுது பண்டார தென்னக்கோன்- சட்ட வழக்கறிஞ்சர்

திரு.சீகு பாரீட் மொஹமட் றமீஸ்– தொழில் நிர்வாகி

திரு. சூலைமான் லப்பே நாசீர்- கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்

ஒப்பந்தத்தில் பணிப்பாளர் ஆதாயம்

இக் கம்பனியின் வியாபாரம் தொடர்பில் ஏதேனும் ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் நேரடி அல்லது மறைமுக ஆதாயம் எதனையும் பணிப்பாளர்கள் கொண்டிருந்திருக்கவில்லை.

கணக்காய்வாளர்கள்

கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் 2017 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர்களாக, Messrs. (பங்காளிகள்) அமரசேகர அன் கோ. பட்டயக் கணக்காளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து செல்லல்

மீளாய்வின் கீழான ஆண்டின் போது 2,773,680,592/- ரூபா கொண்ட தேறிய நட்டமொன்றும், 11,823,696,122/- ரூபா தொகையினைக் கொண்ட திரண்ட நட்டங்களும் இக்கம்பனிக்கு ஏற்பட்டுள்ளதுடன், கம்பனியின் நடைமுறைப் பொறுப்புகளானவை 11,290,858,189/- ரூபாவினால் அதன் மொத்தச் சொத்துக்களை விஞ்சியுள்ளன. இவ்வாறு இருந்தபோதிலும், அதன் கடப்பாடுகள் நிலுவையாகவுள்ள போது அவற்றைத் தீர்ப்பதற்கு ஏதுவாக பொதுத் திறைசேரி நிதியினைத் தொடர்ந்து வழங்கும் என்ற எடுகோளின் பேரில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு ஒன்றின் அடிப்படையில் இக் கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சபைக்காகவும் சபை சார்பிலும் ஒப்பமிடப்பட்டுள்ளது.

Corporate Affairs (Private) Limited
Secretaries

M/S Corporate Affairs (Pvt) Ltd
கம்பனிச் செயலாளர்
21 மே 2019

கூட்டுரிமை ஆட்சி

சபை உறுப்பினர்கள், சிரேட்ட முகாமைத்துவக் குழு மற்றும் அலுவலர் குழாம் ஆகிய சகலரும் இக் கம்பனிக்குள் வெளிப்படையானதும் பயனுறுதி வாய்ந்ததுமான கூட்டுரிமை ஆட்சி நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும் அமுல்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புச் செய்துள்ளனர் என்ற அதன் தீர்மானத்தில் கம்பனி உறுதியாகவிருந்துள்ளது. இக் கம்பனியானது அதியுயர் நியமங்கொண்ட கூட்டுரிமை ஆட்சிக்கு அதுவாகவே பொறுப்பினைக் கொண்டுள்ளது. நிலைத்துநிற்கும் மதிப்பு உருவாக்கம் கருதி மாற்றியமைக்கப்படும், பொறுப்பு வாய்ந்த செயற்றிறன் நோக்கிய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாட்டிற்கான அடிப்படையினை கூட்டுரிமை ஆட்சி முன்வைக்கின்றது. தமது உத்தியோகபூர்வ கடமைகளின் செயற்றிறனிலும் கம்பனியின் மதிப்பினை பாதிக்கக்கூடிய ஏனைய சூழ்நிலைகளிலும் சிரேட்ட முகாமையினாலும் பணிப்பாளர் சபையினாலும் இணங்கியொழுகப்பட்டுள்ள கூட்டுரிமை விழுமியங்களின் வலுவான தொகுதியொன்றுக்கூடாக கம்பனியின் சகல மட்டங்களிலும் கூட்டுரிமை ஆட்சி நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது. கம்பனியானது அதன் சகல செயற்பாடுகளிலும் நேர்மை, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் தொழில்வாண்மை என்பவற்றின் அதியுயர் நியமங்களுக்கு அர்ப்பணிப்புச் செய்கின்றது.

கம்பனியின் அக்கறைதாரர்களுக்காக அதன் நீண்டகால மதிப்பினை அதிகரிக்கும் பொருட்டு தலைவரின் / முகாமைத்துவப் பணிப்பாளரின் வழிகாட்டல் மற்றும் சபையின் மேற்பார்வை ஆகியவற்றின் கீழ் கம்பனியின் முகாமையாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரினால் அதன் வியாபாரம் நடாத்தப்படுகின்றது. சபையானது நிலைத்துநிற்கக்கூடியதும் நன்மையளிக்கக்கூடியதுமான, சகல அக்கறைதாரர்களுக்குமான மதிப்பினை உருவாக்குவதன் மூலம் அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டுள்ளது. கம்பனியின் கூட்டுரிமை வியாபாரத்தை விளங்கிக்கொள்வதற்கு பணிப்பாளர் சபைக்கு நன்கு வசதியளிக்கப்பட்டுள்ளது.

சபையானது மாதாந்தம் கூடுவதுடன் பின்வருவனவற்றின் மீது முழுமையான கவனத்தினைச் செலுத்துகின்றது:-


- தந்திரோபாய மற்றும் தொழிற்பாட்டுப் பிரச்சினைகளை மீளாய்வு செய்தல்.
- இலாபத்தையும் தொழிற்படு மூலதனத்தையும் அத்துடன் மாதாந்த முகாமைத்துவக் கணக்குகளையும் மீளாய்வு செய்தல்.
- தலைவர் / முகாமைத்துவப் பணிப்பாளர் ஊடாக சிரேட்ட முகாமையாளர்களுக்கான ஆலோசனையையும் வழிகாட்டலையும் வழங்குதல்.
- அக்கறைதாரர்களுக்கான உரியநேர மற்றும் காலக்கிரம அறிக்கைகளை வழங்குதலும் சுற்றிப்பரப்புதலும்.
- பிரதான முதலீடுகளை அனுமதித்தல்.
- இடைக்கால மற்றும் வருடாந்த அறிக்கைகளை அனுமதித்தல்.

கம்பனிக்கும் அக்கறைதாரர்களுக்கும் இடையிலான செயலூக்கமிக்க ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் சகல அக்கறைதாரர்களினதும் உரிமைகளை சபை அங்கீகரிக்கின்றது.


நிதிசார் சிறப்புக்கூறுகள்

	2017	2016
நிதி		
வருமானம்	29,611,412,280	29,982,884,877
விற்பனைக்கிரயம்	(27,049,608,154)	(28,991,483,747)
ஏனைய வருமானம்	721,184,115	355,790,933
தொழிற்பாட்டுச் செலவுகள்	(4,712,989,609)	(5,135,966,199)
நிதி வருமானம்	80,853,524	23,112,527
நிதி செலவுகள்	(1,424,532,747)	(1,364,376,909)
ஆண்டிற்கான தேறிய நட்டம்	(2,773,680,591)	(5,130,038,519)
மொத்த சொத்துக்கள்	9,033,648,058	9,156,885,994
விற்பனை நிலைய உற்பத்தித்திறன்		
சராசரியான விற்பனை நிலையம்	390	323
விற்பனை நிலையம் ஒன்றுக்கான வருமானம்	75,926,698	92,826,269
விற்பனை நிலையம் ஒன்றுக்கான பெறுமதி சேர்ப்பனவு	(7,112,002)	(15,882,472)
அலுவலர் குழாத்து உற்பத்தித்திறன்		
சராசரியான உறுதிநிலை	3,784	3,641
ஊழியர் ஒருவருக்கான வருமானம்	75,926,698	92,826,269
ஊழியர் ஒருவருக்கான பெறுமதி சேர்ப்பனவு	(1,245,505)	(1,410,592)


புரள்வு இலங்கை ரூ. மி.



நிகர இலாபம்/(நட்டம்) இலங்கை ரூ. மி



மொத்த விற்பனை நிலையங்கள்



கூட்டுரிமைத் தகவல்கள்

கம்பனியின் பெயர்	வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
கம்பனிப் பதிவிலக்கம்	PB 1326
பதிவுசெய்யப்பட்ட முகவரி	இல. 108, நேகிறிஸ் கட்டடம், யோர்க் வீதி, கொழும்பு - 01
சட்ட வடிவம்	2007 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட முழுமையாக அரசுக்குடமையான கம்பனி
வங்கியாளர்	மக்கள் வங்கி இலங்கை வங்கி
கணக்காளர்	கணக்காய்வாளர் அதிபதித் திணைக்களம்
செயலாளர்	M/S Corporate Affairs (Pvt) Ltd நிறுவனம்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான நிதிநிலமைக்கூற்று மற்றும் அப்போது முடிவடைந்த ஆண்டுக்கான இலாபம் அல்லது நட்டம் மற்றும் ஏனைய முழுமொத்த வருமானம் பற்றிய கூற்று, உரிமைமுதல் மாற்றக்கூற்று அத்துடன் காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றையும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய பொழிப்பொன்றையும் அத்துடன் ஏனைய விளக்கமான தகவல்களையும் உள்ளடக்கிய 2017 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் ("இக்கம்பனி") நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி எனது வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வை மேற்கொண்ட வேளையில், அரசாங்க செய்முறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனம் ஒன்றின் உதவியினை நான் பெற்றுக்கொண்டேன்.

நிதிக் கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இந்நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் நியாயமான முன்வைப்புக்கும் அத்துடன் மோசடியோ அல்லது தவறோ காரணமான பொருண்மையான தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்டு இந்நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பை இயலுமைப்படுத்துவதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்றவாறான அத்தகைய உள்ளகக் கட்டுப்பாட்டிற்கும் பணிப்பாளர் சபை ("இச்சபை") பொறுப்புடையது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இக் கணக்காய்வினை மேற்கொண்டதன் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் ஓர் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதே எனது பொறுப்பாகும். மறுதலிப்பு அபிப்பிராய பந்திக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்கள் காரணமாக, எவ்வாறாயினும், கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றுக்கான அடிப்படையொன்றை வழங்கும் பொருட்டு போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மறுதலிப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) முகாமையினால் பின்பற்றப்பட்ட இருப்பு மதிப்பீட்டு முறையானது இலங்கை கணக்கீட்டு நியமம் 2 (LKAS 2) - "இருப்புக்கள்" என்பதன் தேவைப்பாடுகளுடன் ஒத்திசைவாக இருக்கவில்லை. நிதிக் கூற்றுக்களில் விற்பனைக் கிரயம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் தொடர்பில் உடனடியாக எழும் நிதித் தாக்கத்தை நிர்ணயிக்கவோ அளவிடவோ முடியவில்லை என்பதுடன் வழங்குநர்களுக்கும் இருப்புக்களுக்கும் திருப்பியனுப்பக்கூடிய இருப்புக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விற்பனைக் கிளைகள் மூலம் திருப்பியனுப்பப்பட்ட இருப்புக்களாக கூறப்பட்ட, பண்டகசாலையில் மீதமுள்ள இருப்புக்களின் கணிசமான அளவொன்றும் ஏற்கனவே காலாவதியாகியுள்ளது. எவ்வாறாயினும், கம்பனியானது இவ்விருப்புக்களை அளவிடவோ மதிப்பிடவோ இல்லை என்பதுடன் ஒவ்வோர் ஆண்டிறுதியிலும் கணக்குகளில் பதிவுசெய்திருக்கவுமில்லை.

மேலும், 14,729,648,431 ரூபா தொகையான வழிச்சரக்குகள் மீளாய்வின் கீழான ஆண்டின் இறுதியில் மனிதவலுசார் (manual) விற்பனைக் கிளைக் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒவ்வொரு மனிதவலுசார் விற்பனைக் கிளைக்கும் மாற்றப்பட்ட இருப்பு வகைகளின் மாற்றல் குறிப்புகளின் தொகை, அளவுகள் மற்றும் பெறுமதி என்பவற்றைக் காட்டும் பொழிப்புக் கூற்றொன்றை இக் கணக்காய்வுச் சரிபார்க்கை வழங்கவில்லை.

(ஆ) மீளாய்வின் கீழான ஆண்டின் இறுதியில் கடனட்டைக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் வங்கி உறுதிப்பாட்டுக்கும் இடையிலான வித்தியாசம் 5,034,310 ரூபாவாக இருந்தது. எவ்வாறாயினும், மனிதவலுசார் விற்பனைக் கிளைகள் உள்ளடங்கலான விற்பனைக் கிளைகளால் நிகழாண்டு ஆரம்பத்திலிருந்து இற்றைவரையுள்ள பேரேட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலான மாற்றத்தைப் பரீட்சிக்க இயலவில்லை.

(இ) மீளாய்வின் கீழான ஆண்டின் இறுதியில் கையிலுள்ள விற்பனைக் கிளை மொத்தக் காசு 570,772,334 ரூபாவாக இருந்தது. எவ்வாறாயினும், 442,035,688 ரூபாவிற்காக மாத்திரமே அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 128,736,646 ரூபா மீதிக்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வின் கீழான ஆண்டின் இறுதியில், கம்பனியின் திரண்ட நட்டம் 11,823,696,122 ரூபாவாக இருந்ததுடன் நடைமுறைப் பொறுப்புக்களானவை நடைமுறைச் சொத்துக்களை 11,290,858,189 ரூபாவினால் விஞ்சிச் சென்றிருந்தன. மேலும், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 220 (1) ஆம் பிரிவில் இனங்காணப்பட்டவாறு மூலதன நிலமையின் தீவிரமான நட்டமொன்றில் கம்பனி இயங்கி வருகின்றது. கம்பனியின் சொத்துக்களினால் அதன்

பொறுப்புக்களைப் பூர்த்செய்யும் கம்பனியின் ஆற்றல் பற்றிய அத்துடன் தொடர்ந்துசெல்லும் எண்ணக்கருவொன்றாகத் தொடர்வதற்கு கம்பனிக்கு இயலுமா என்பது பற்றிய சந்தேகத்தை இக் காரணிகள் எழுப்புகின்றன.

(உ) 1,624,128,342 ரூபா தொகையினைக் கொண்ட ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கான இற்றைப்படுத்தப்பட்ட நிலையான சொத்து பதிவேடு எதுவும் இல்லை. மேலும், இனங்காணப்படாத மற்றும் கணக்கிணக்கம் செய்யப்படாத சொத்துக்களின் பெறுமதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவற்றில் சில 335,204,308 ரூபா தொகையினைக் கொண்ட ஆரம்ப மீதிகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

(ஊ) கம்பனியினால் சொந்தமாக்கப்பட்ட காணிகளின் உரிமைத்துவத்தை / குத்தகைநில உரிமைகளை மெய்ப்பிப்பதற்கான ஆவணச் சான்றானது கணக்காய்வுச் சரிபார்க்கைக்கு கிடைக்கக்கூடியதாகவில்லை.

(எ) 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட அரிசி இறக்குமதி தொடர்பில் அப்புறப்படுத்தல் முகவருக்கு செலுத்தப்பட்ட 267,600,501 ரூபா தொகை கொண்ட முற்பணங்கள் தொடர்பான அப்புறப்படுத்தல் ஆவணமாக்கலானது கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாகச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) குறிப்பிடப்பட்ட மீதியின் துல்லியத்தன்மை மற்றும் முழுமை பற்றி நாம் ஆராய்ந்து பார்ப்பதற்கு ஏதுவாக, நிதிக் கூற்றுக்கான குறிப்பு 29.2 இல் அறிக்கையிடப்பட்டவாறு தொடர்புபட்ட தரப்பினர்களிடமிருந்தான மீதிகளின் சுயாதீன உறுதிப்பாடு எதுவும் கிடைக்கப்பெறவில்லை. ஆதலால், குறிப்பிடப்பட்ட மீதிகளின் துல்லியத்தன்மை மற்றும் முழுமை என்பவற்றில் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.

(ஐ) வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் நான்கில் மூன்று பங்கானது மனிதவலுசார் கணக்கீடு மூலம் கணக்கிடப்படுவதனால், இவ் விற்பனைக் கிளைகளின் இருப்பு மற்றும் கொள்வனவு என்பன நாளேடுகளின் ஊடாக பொதுப் பேரேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக, விரிதாள்களை (spread sheets) பயன்படுத்தும் இச் செய்முறையானது தரவுகள் விடுபடல், இரட்டிப்பாதல் மற்றும் பெறுமதிகள் குறைத்து மதிப்பிடப்படல் போன்ற உள்ளக வழுக்களை விளைவித்துள்ளது.

(ஒ) வியாபார சென்மதிகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் வழங்குநர்களுக்கு செலுத்தத்தக்கதாக காட்டப்பட்ட ஒத்த மீதிகளுக்கு அதாவது 148,759,779 ரூபாவிற்கு எதிராக அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த மீதித் தொகைகளுடன் அதாவது 208,555,973 ரூபாவுடன் ஒப்பிடுகையில் எழுந்த 59,796,194 ரூபா தொகை கொண்ட

வித்தியாசம் அதன்கண் இனங்காணப்பட்டது. வழங்குநரினால் உறுதிப்படுத்தப்பட்ட மொத்த மீதித் தொகைகளானவை 2,764,648,192 ரூபா கொண்ட பெறுமதியொன்றுக்கான தெரிவுசெய்யப்பட்ட மாதிரிகளின் அடிப்படையில் கோரப்பட்ட மீதிகளின் உறுதிப்படுத்தலுக்கான பதிலாக அமைந்தது. 2,615,888,413 ரூபா கொண்ட பெறுமதியொன்றுக்கு வழங்குநர்கள் பதிலிறுக்கவில்லை.

(ஓ) 18,311,622 ரூபா தொகை கொண்ட கொள்வனவுகள் மீதான உள்ளீட்டு பெறுமதிசேர் வரி (VAT) கொடுப்பனவுகள் தொடர்பில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட வருமதி தொகையானது (நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20.2 ஐப் பார்வையிடுக), நிகழ் நிதியாண்டின் போது உரிய காலாண்டுகள் சம்பந்தமாக இக் கம்பனியினால் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திருப்பி அனுப்பப்பட்ட பெறுமதிசேர் வரியில் (VAT) செலுத்தத்தக்க வெளியீட்டு பெறுமதிசேர் வரிக்கு எதிராக உள்ளீட்டு வரவாக உரிமைக் கோரிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு அறவிடக்கூடிய உள்ளீட்டு பெறுமதிசேர் வரி தொகைகளுக்கு காலங்கடந்துள்ளதுடன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் 6 ஆம் உபபிரிவிற்கிணங்க அதனை உரிமைக் கோரிக்கையிட முடியவில்லை.

(ஔ) நிதிக் கூற்றுக்களில் ஏனைய வருமானத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சில வருமானங்களானவை (குறிப்பு 07 ஐப் பார்வையிடுக) பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் பகுதி 11 இன் முதலாம் அட்டவணையின் கீழான விதிவிலக்குப் பட்டியலில் விதிவிலக்கு வருமானமாக வகைப்படுத்தப்படாத போதிலும்; அத்துடன் பெறுமதிசேர் வரியின் கொடுப்பனவிற்கு பொறுப்பாகவிருக்கின்ற போதிலும் அவை தொடர்பான பெறுமதிசேர் வரியை கம்பனி செலுத்தியிருக்கவில்லை. அவ்வாறு செலுத்தத்தக்க தொகையானது ஆவணச் சான்று மற்றும் விபரங்கள் என்பவற்றின் பற்றாக்குறை காரணமாக அளவிடப்பட முடியவில்லை.

(க) 142,292,252 ரூபா பெறுமதிக்கு பாதுகாப்பு புகைப்படக்கருவி (கமெரா) முறைமையொன்றைப் பொருத்துவதற்கு 2016 யூன் 10 ஆம் திகதியன்று வழங்குநர் ஒருவருடன் உடன்படிக்கையொன்றை இக் கம்பனி கைச்சாத்திட்டிருந்தது. இக் கருத்திட்டமானது 2016 டிசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஆகக்கூடியது நான்கு மாதங்களில் பூர்த்திசெய்திருந்திருக்கப்பட வேண்டும், ஆனால் கணக்காய்வுத் திகதியளவில் பூர்த்தி செய்திருக்கப்படவில்லை.

(ங) தொழில்முயற்சி வள திட்டமிடல் முறைமை (ERP முறைமை) ஒன்றை வழங்கி, நிறுவி, தொழிற்படுத்திப் பேணும் தனியார் கம்பனியொன்று சார்பில் 2016 நவம்பர் 18 ஆம் திகதியன்று 198,175,784 ரூபா பெறுமதியான ஒப்பந்தமொன்றை இக் கம்பனி வழங்கியிருந்தது. இது குறித்து பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அரசாங்கப் பெறுகை வழிகாட்டலின் ஏற்பாடுகள் 1.2, 2.3.2 (இ), 2.8.3, 2.5.1, 2.7.4, 2.8.1 (ஆ), 2.11.1, 3.2.2 (அ), 4.2.1, 4.2.2, 4.2.3, 4.3.1, 4.3.2, 5.3.11, 5.4.1, 8.2.1, 8.3.1, 5.3.15 (ஆ), 6.3.2, 7.7.1 (ஆ) (ii) & (iii)

(ii) 2016 நவம்பர் 18 ஆம் திகதியன்று ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கையொன்றை இக் கம்பனி கைச்சாத்திட்டிருந்ததுடன் ஒப்பந்தக் காலப்பகுதி 2017 ஜனவரி 18 ஆம் திகதியிலிருந்து 2018 ஏப்பிறல் 20 ஆம் திகதி வரையாக இருந்தது. எவ்வாறாயினும், இக் கருத்திட்டமானது 2019 யூன் 30 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன் பெறுகை வழிகாட்டல் 8.14.1 இற்கிணங்க நீட்டிப்பு எதுவும் செய்யப்படவில்லை.

(iii) இக் கருத்திட்டம் தொடர்பான உடன்படிக்கையின் 17.1 ஆம் பிரிவிற்கிணங்க, கொள்வனவாளரின் எழுத்துமூல சம்மதமின்றி ஒப்பந்தக்காரரினால் உறப்படும் ஏதேனும் சேதங்கள் அல்லது நட்டங்கள் அல்லது அதன் ஏதேனும் பகுதி அல்லது வேறு எவரேனும் தரப்பினரால் உறப்படுபவை தொடர்பில் ஒப்பந்தப் பெறுமதியின் 1 சதவீதத்திற்கு சமனான நட்டமொன்றுக்கு ஒப்பந்தக்காரர் ஆளாதல் வேண்டும். செயற்றிறன் அறிக்கைகளுக்கு இணங்க, ஒப்பந்தக்காரர் வேறு யாரோ முகவராண்மையிடமிருந்து உதவியினைப் பெற்றுக்கொண்டதன் காரணமாக இக் கருத்திட்டம் தாமதமடைந்திருந்தது. எவ்வாறாயினும், தாமதத்திற்காக எந்தவொரு சேத இழப்பீடும் ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iv) கணக்காய்வுத் திகதியிலுள்ளவாறு, இக் கருத்திட்டத்தின் நிறைவுத் திகதியிலிருந்து 375 நாட்கள் கடந்திருந்தன; ஒப்பந்தத் தொகையின் 1 சதவீதம் கொண்ட தாமதக் கட்டணமொன்று உரிய உடன்படிக்கையின் 22.1 ஆம் பிரிவிற்கேற்ப தாமதமடைந்த நாட்களின் எண்ணிக்கைக்கு அறவிடப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

மறுதலிப்பு அபிப்பிராயம்

மறுதலிப்பு அபிப்பிராய பந்திக்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றுக்கான அடிப்படையொன்றை வழங்கும் பொருட்டு போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான அபிப்பிராயமொன்றை நான் வெளிப்படுத்தவில்லை.

ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குறுத்துகை தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 163 (2) ஆம் பிரிவின் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு, நான் பின்வருவனவற்றைத் தெரிவிக்கின்றேன்:

(அ) மறுதலிப்பு அபிப்பிராய அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் மட்டுப்பாடுகளும் மேலே குறிப்பிடப்பட்டவாறு அமைந்துள்ளன.

(ஆ) எனது அபிப்பிராயத்தில்:

- இந்த அறிக்கையின் (அ) தொடக்கம் (ஏ) வரையான பந்திகளில் தெரிவிக்கப்பட்டவாறு இக் கணக்காய்விற்காகத் தேவைப்படுத்தப்பட்ட போதுமான பொருத்தமான கணக்காய்வுச் சான்றினை என்னால் பெற்றுக்கொள்வதற்கு இயலாதிருந்ததுடன், எனது பரீட்சிப்பிலிருந்து எந்தளவிற்குத் தென்படுகின்றதோ அந்தளவிற்கு, போதுமானளவு கணக்கீட்டுப் பதிவுகள் எவையும் இக்கம்பனியினால் பேணப்பட்டிருக்கவில்லை.
- இக் கம்பனியின் நிதிக்கூற்றுக்களானவை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுக்கு ஒத்திசையவில்லை.

பாராளுமன்றத்திற்கான அறிக்கை

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையானது உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஒப்பமிட்டவர்
டபிள்யு.பி.சி விக்ரமரத்ன

கணக்காய்வாளர் அதிபதி

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
இலாபம் அல்லது நட்டம் மற்றும் விரிவான வருமானக் கூற்று

இலங்கை ரூபாக்களில்

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	2017	2016
வருமானம்	4	29,611,412,280	29,982,884,877
விற்பனைக்கான செலவுகள்	5	(27,049,608,154)	(28,991,483,747)
மொத்த இலாபம்		**2,561,804,126**	**991,401,129**
இருப்பு பற்றாக்குறை மற்றும் ஏனைய இருப்பு இழுப்புகள்	6	(396,607,129)	(1,322,824,902)
ஏனைய வருமானம்	7	721,184,115	355,790,933
நிர்வாகச் செலவுகள்	8	(2,326,470,029)	(1,922,121,591)
விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்	9	(1,983,150,114)	(1,828,086,762)
சேதத்திற்கான ஏற்பாடுகள்	10	(6,762,337)	(62,932,944)
செயற்பாடு மூலம் இலாபம் / (நட்டம்)		**(1,430,001,368)**	**(3,788,774,137)**
வட்டி செலவுகள்	11	(1,424,532,747)	(1,364,376,909)
வட்டி வருமானம்	11	80,853,524	23,112,527
வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)		**(2,773,680,592)**	**(5,130,038,518)**
வருமான வரி செலவுகள்	12	-	-
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)		**(2,773,680,592)**	**(5,130,038,518)**
பங்குக்கான அடிப்படை சம்பாத்தியம் / (இழப்பு) (ரூபா)	13	**(31.03)**	**(57.40)**
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)		(2,773,680,592)	(5,130,038,518)
ஏனைய விரிவான வருமானம் (செலவுகள்)			
ஓய்வு நன்மைக் கடமை மீதான கணிப்பிடப்பட்ட சம்பாத்தியம் / (இழப்பு)	23	(9,148,330)	16,586,222
ஆண்டுக்கான ஏனைய விரிவான வருமானம் / (செலவுகள்)		**(2,782,828,922)**	**(5,113,452,296)**

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்ட இலக்கங்கள் கழிக்கப்பட வேண்டியவை
பக்கம் 20 இலிருந்து 62 வரையுள்ள நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
நிதி நிலைமை தொடர்பான கூற்று

இலங்கை ரூபாக்களில்

டிசம்பர் 31 இல் உள்ளவாறு	குறிப்பு	2017	2016
சொத்துகள்			
நடைமுறை அல்லாத சொத்துகள்			
உடமை, இயந்திரங்கள், உபகரணங்கள்	14	1,624,128,342	1,010,415,902
அருவச் சொத்துகள்	15	7,793,760	14,464,513
மொத்த நடைமுறை அல்லாத சொத்துகள்		**1,631,922,102**	**1,024,880,415**
நடைமுறைச் சொத்துகள்			
இருப்புகள்	17	4,295,373,354	3,975,959,505
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	18	1,128,358,547	911,427,427
வைப்புகள் மற்றும் முற்பணங்கள்	19	589,267,247	695,602,375
முற்கொடுப்பனவு செய்யப்பட்ட செலவுகள், சட்டரீதியான வருமதிகள்	20	47,455,994	34,517,023
நிலையான வைப்புகள்		301,856,496	47,581,810
காசு மற்றும் காசுக்கு சமமானவை	21	1,039,414,318	2,466,917,439
மொத்த நடைமுறைச் சொத்துகள்		**7,401,725,956**	**8,132,005,579**
மொத்த சொத்துகள்		**9,033,648,058**	**9,156,885,994**
மூலதனமும் பொறுப்புகளும்			
மூலதனம்			
குறிக்கப்பட்ட மூலதனம்	22	893,752,720	893,752,720
தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியம் (பற்றில்)		(11,823,696,122)	(9,040,867,200)
மொத்த மூலதனம்		**(10,929,943,402)**	**(8,147,114,480)**
நடைமுறை அல்லாத பொறுப்புகள்			
ஒய்வு நன்மைக் கடமை	23	130,447,129	93,581,728
அரச நன்கொடைகள் (நடைமுறை அல்லாத பகுதி)	24	1,140,560,186	852,431,264
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புகள்		**1,271,007,314**	**946,012,992**
நடைமுறைப் பொறுப்புகள்			
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்	25	5,359,696,027	3,475,825,768
அரச நன்கொடைகள் (நடைமுறைப் பகுதி)	24	284,781,616	104,684,499
குறுகிய காலக் கடன்கள்	26	12,434,229,041	12,061,858,959
சட்டரீதியாக செலுத்த வேண்டியவை	27	135,223,953	-
அட்டுறு செலவுகள்	28	97,712,079	113,951,131
வங்கி மேலதிகப் பற்று	21	380,941,429	601,667,126
மொத்த நடைமுறைப் பொறுப்புகள்		**18,692,584,145**	**16,357,987,483**
மொத்த மூலதனமும் பொறுப்புகள்		**9,033,648,058**	**9,156,885,995**

இக் கம்பனியின் நிதிக்கூற்றுகள் 2007 இல.07 கம்பனிகள் சட்டத்தின் தேவைகளுக்கு இணங்க அமைந்திருப்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.....
பிரதிப் பொது முகாமையாளர்- நிதி

பணிப்பாளர் சபை இந்த நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பதற்கும் முன்வைப்பதற்கும் பொறுப்புடமை உடையவர்கள்

சபையின் சார்பில் அனுமதியளிக்கப்பட்டதும் ஒப்பமிடப்பட்டதும்

.....
பணிப்பாளர்

LANKA SATHOSA LIMITED
.....
பணிப்பாளர்

திகதி : 21 மே 2019.
கொழும்பு

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்ட இலக்கங்கள் கழிக்கப்பட வேண்டியவை
பக்கம் 20 இலிருந்து 62 வரையுள்ள நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
மூலதனத்தில் ஏற்பட்ட மாற்றம் குறித்த கூற்று

(இலங்கை ரூபாக்களில்)

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக

	குறிக்கப்பட்ட மூலதனம்	தக்க வைக்கப்பட்ட சம்பாத்தியம் (பற்றில்)	மொத்தம்
2016 ஜனவரி 01 இல் உள்ளவாறான மீதி	**893,752,720**	**(3,927,414,904)**	**(3,033,662,184)**
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)	-	(5,130,038,518)	(5,130,038,518)
ஏனைய விரிவான வருமானம் / (செலவுகள்)	-	16,586,222	16,586,222
2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	**893,752,720**	**(9,040,867,200)**	**(8,147,114,480)**
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)	-	(2,773,680,592)	(2,773,680,592)
ஏனைய விரிவான வருமானம் / (செலவுகள்)	-	(9,148,330)	(9,148,330)
2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி	**893,752,720**	**(11,823,696,122)**	**(10,929,943,402)**

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்ட இலக்கங்கள் கழிக்கப்பட வேண்டியவை

பக்கம் 20 இலிருந்து 62 வரையுள்ள நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
காசுப் பாய்ச்சல் கூற்று

(இலங்கை ரூபாக்களில்)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	2017	2016
செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)		(2,773,680,592)	(5,130,038,518)
இவற்றுக்காக சீராக்கப்பட்டது,			
தேய்மானம்	14	295,914,911	231,287,124
அருவச் சொத்துகளின் பதிவழிப்பு	15	10,164,253	6,541,942
அரச சொத்துகளின் பதிவழிப்பு	24	(367,575,495)	(110,664,984)
பணிக்கொடைக்கான ஏற்பாடு	23	29,994,556	24,646,179
வட்டி வருமானம்	11	(80,853,524)	(23,112,527)
வட்டி செலவுகள்	11	1,424,532,747	1,364,376,909
தொழிற்படு மூலதனத்தில் மாற்றத்திற்கு முன்னர் செயற்பாட்டு நட்டம்		**(1,461,503,143)**	**(3,636,963,876)**
தொழிற்படு மூலதனத்தில் மாற்றங்கள்			
இருப்புகள்		(319,413,849)	3,377,901,485
வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்		(216,931,121)	(591,868,696)
வைப்புகள் மற்றும் முற்பணங்கள்		106,335,129	(140,608,691)
சட்டரீதியான வருமதிகள்		(12,938,971)	1,342,436
வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள்		1,883,870,259	1,965,622,508
சட்டரீதியாக செலுத்த வேண்டியவை		135,223,953	-
அட்டுறு செலவுகள்		(16,239,052)	13,841,931
செயற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட செலவுகள்		**98,403,205**	**989,267,098**
செலுத்தப்பட்ட பணிக்கொடை	24	(2,277,486)	(991,826)
செலுத்தப்பட்ட வட்டி	11	(521,041,300)	(491,978,825)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்		**(424,915,580)**	**496,296,447**
முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
கையகப்படுத்தப்பட்ட காணி, இயந்திரங்கள், உபகரணங்கள் / CWIP இல் ஏற்பட்ட	14	(909,627,351)	(351,414,139)
கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துகள்	15	(3,493,500)	-
(நீண்ட கால) வைப்புகள் மூலம் பெறப்பட்ட / (பயன்படுத்தப்பட்ட) தேறிய வருமானம்		(254,274,686)	(9,837,001)
பெறப்பட்ட வட்டி	11	80,853,524	23,112,527
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட / (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப்பாய்ச்சல்		**(1,086,542,013)**	**(338,138,614)**
நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல்			
மீள்செலுத்தப்பட்ட இறக்குமதிக் கடன்கள்	26	(531,121,366)	(649,667,381)
பெறப்பட்ட அரச நன்கொடைகள்	24	835,801,533	839,901,352
நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல்		**304,680,168**	**190,233,971**
ஆண்டில் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட தேறிய மாற்றங்கள்		**(1,206,777,424)**	**348,391,805**
ஆண்டு ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை		1,865,250,313	1,516,858,509
ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை	21	**658,472,889**	**1,865,250,313**

அடைப்புக்குறிக்குள் காட்டப்பட்ட இலக்கங்கள் கழிக்கப்பட வேண்டியவை

பக்கம் 20 இலிருந்து 62 வரையுள்ள நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புகள் இந்த நிதிக்கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதிகளாகும்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

1. கூட்டுரிமைத் தகவல்கள்

1.1 பொது

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனமானது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டு அமையப்பெற்றுள்ள ஒரு கம்பனியாகும். இக் கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் மற்றும் பிரதான இடம் என்பன இல. 27, CWE செயலகக் கட்டடம், வோக்ஸ்ஹோல் வீதி, கொழும்பு 02 எனும் முகவரியில் அமைந்துள்ளன.

1.2 பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

இக் கம்பனியானது நுகர்வுப் பொருட்களின் சில்லறை மற்றும் மொத்த விற்பனையில் பிரதானமாக ஈடுபட்டுள்ளது.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு இக் கம்பனியின் அலுவலர் குழாத்து உறுதியானது 3784 ஆகும் (2016 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறு 3641 ஆகும்).

1.4 இணக்கப்பாட்டுக் கூற்று

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறும் அத்துடன் அப்போது முடிவுற்ற காலப்பகுதி சார்பிலும் இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் ("நிதிக் கூற்றுக்கள்") என்பவற்றுடன் ஒன்றுசேர்ந்த நிதி நிலமைக் கூற்று, முழுமொத்த வருமானக் கூற்று, உரிமை மாற்றக்கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட, இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் (SLFRS/LKAS) இணக்கமுறுகின்றன.

1.5 வெளியீட்டிற்கான அதிகாரமளித்தல் திகதி

2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களானவை 2019 May 21 ஆம் திகதியன்று பணிப்பாளர் சபையினால் வெளியீட்டிற்காக அதிகாரமளிக்கப்பட்டன.

1.6 பணிப்பாளர்களின் பொறுப்புக் கூற்று

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட, இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS) ஆகியவற்றுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் முன்வைப்பிற்கான பொறுப்பினை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது.

2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1.1 தயாரிப்பிற்கான அடிப்படை

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs) ஒத்திசைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு சில முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. இக் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் செய்முறையில் முகாமையானது அதன் திறனாய்வுத் தீர்வைப் பிரயோகிக்கவும் வேண்டியுள்ளது. உயர்வான அளவைக் கொண்ட திறனாய்வுத் தீர்வுகளை அல்லது சிக்கலானதன்மையினை உள்ளடக்கிய பரப்புகளானவை, அல்லது எடுகோள்களும் மதிப்பிடுகளும் நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமாகவுள்ள பரப்புகளானவை குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிக் கூற்றுக்களானவை வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் நிதி நிலமைக் கூற்றிலுள்ள பின்வரும் பொருண்மையான விடயங்களுக்கானவற்றைத் தவிர, நிதிக் கூற்றுக்களைப் பாதிக்கும் பணவீக்க காரணிகளுக்காக எதுவித சீராக்கங்களும் செய்யப்பட்டிருக்காமல் தொடர்ந்தும் ஏற்புடையதாகும்:

- எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறை அடிப்படையில் (இடர் கணிப்பீடுசார் விலைமதிப்பு முறை), வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடானது அதன் நிகழ்காலப் பெறுமதிகளில் அளவிடப்படுகின்றது.

2.1.2 வெளியிடப்பட்ட, ஆனால் இன்னமும் அமுலுக்கு வராத இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (SLFRS/LKAS)

வெளியிடப்பட்ட, ஆனால் நிதிக் கூற்றுக்களின் வெளியீட்டுத் திகதி வரை அமுலுக்கு வராத நியமங்கள் கீழே பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நியமங்கள் அமுலுக்குவரும் போது அவற்றைப் பின்பற்றுவதற்கு இக் கம்பனி உத்தேசிக்கின்றது.

அ) SLFRS 9 - நிதியியல் சாதனங்கள்: 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட SLFRS 9 ஆனது இலங்கை கணக்கீட்டு நியமம் 39 (LKAS 39) நிதியியல் சாதனங்கள்; கண்டறிதல் மற்றும் அளவிடுதல் என்பதில் நடைமுறையிலுள்ள வழிகாட்டலை பதிலீடு செய்கின்றது. நிதிச் சொத்துகள் மீதான பெறுமதிக் குறைவை கணிப்பிடுவதற்கான புதிய எதிர்பார்க்கப்பட்ட கடன் நட்ட மாதிரியொன்றையும் புதிய பொதுப் பாதுகாப்பு கணக்கீட்டுத் தேவைப்பாடுகளையும் உள்ளடக்கி, நிதிச் சாதனத்தின் வகைப்படுத்தல் மற்றும்

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அளவீடு தொடர்பான திருத்தப்பட்ட வழிகாட்டலை SLFRS 9 உள்ளடக்குகின்றது. LKAS 39 இலிருந்து நிதிச் சாதனத்தின் கண்டறிதல் தொடர்பான வழிகாட்டலையும் இது தருகின்றது. 2018 ஜனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதி சார்பில் SLFRS 9 அமுலில் உள்ளது.

ஆ) SLFRS 15 - வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்தான வருமானம்: எந்தளவிற்கு மற்றும் எப்போது வருமானம் கண்டறியப்படுகின்றது என்பதை வரையறுப்பதற்கான முழுமையான கட்டமைப்பொன்றை SLFRS 15 உருவாக்குகின்றது. LKAS 18 - வருமானம் மற்றும் LKAS 11 - நிர்மாண ஒப்பந்தங்கள் என்பன உள்ளடங்கலாக நடைமுறையிலுள்ள வருமான கண்டறிதல் வழிகாட்டலினை இது பதிலீடு செய்கின்றது. 2018 ஜனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடல் காலப்பகுதி சார்பில் SLFRS 15 அமுலில் உள்ளது.

இக் கம்பனியானது SLFRS 15 / SLFRS 9 இன் பிரயோகத்திலிருந்து விளையப்பெறும், அதன் நிதிக் கூற்றுக்கள் மீதான சாத்தியமான தாக்கங்களை மதிப்பிட்டு வருகின்றது.

இ) SLFRS 16 - குத்தகைகள்: SLFRS 16 LKAS 17 குத்தகைகள் மற்றும் தொடர்புடைய விளக்கங்களை மாற்றுகிறது. SLFRS 16 குத்தகைகளை அங்கீகரித்தல், அளவிடுதல், வழங்கல் மற்றும் வெளிப்படுத்துதல் ஆகியவற்றுக்கான கொள்கைகளை வகுக்கிறது மற்றும் LKAS 17 இன் கீழ் நிதி குத்தகைகளுக்கான கணக்கீட்டைப் போன்ற இருப்புநிலை மாதிரியில் ஒற்றை கீழ் அனைத்து குத்தகைகளையும் குத்தகைதாரர்கள் கணக்கிட வேண்டும். ஒரு குத்தகையின் தொடக்க தேதியில் , குத்தகைக் கொடுப்பனவுகளைச் செய்வதற்கான ஒரு பொறுப்பை (அதாவது, குத்தகைப் பொறுப்பு) மற்றும் குத்தகைக் காலத்தின் போது (அதாவது பயன்பாட்டு உரிமையின் சரியான சொத்து) அடிப்படை சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் குறிக்கும் ஒரு சொத்தை ஒரு குத்தகைதாரர் அங்கீகரிப்பார். குத்தகை பொறுப்புக்கான வட்டி செலவையும், சரியான பயன்பாட்டு சொத்தின் மீதான தேய்மான செலவையும் தனித்தனியாக அங்கீகரிக்க குத்தகைதாரர்கள் தேவைப்படுவார்கள்.

SLFRS 16 ஜனவரி 1, 2019 முதல் அல்லது அதற்குப் பிறகு தொடங்கும் வருடாந்திர காலங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். ஆரம்ப விண்ணப்பம் அனுமதிக்கப்படுகிறது, ஆனால் ஒரு நிறுவனம் SLFRS 15 ஐப் பயன்படுத்துவதற்கு முன்பு அல்ல. தரநிலையின் மாற்றம் விதிகள் சில நிவாரணங்களை அனுமதிக்கின்றன.

2018 ஆம் ஆண்டில், நிறுவனம் அதன் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கைகளில் SLFRS 16 இன் சாத்தியமான விளைவை மதிப்பிட திட்டமிட்டுள்ளது.

2.1.3 கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள்

கீழே விதித்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்களானவை, வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலொழிய நிதிக் கூற்றுக்களில் தரப்பட்டுள்ள காலப்பகுதிகளுக்கு தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

சிறந்த முன்வைப்பிற்கும் அத்துடன் தற்போதய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒப்பிடுவதற்கும், பொருத்தமானவிடத்து, முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பும் வகைப்படுத்தலும் திருத்தப்பட்டுள்ளன.

2.1.4 அந்நியச் செலாவணி மாற்றம்

அ) தொழிற்பாட்டு மற்றும் முன்வைப்பு நாணயம்

நிறுவனம் தொழிற்படுகின்ற முதன்மையான பொருளாதாரச் சூழலின் நாணயத்தைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும் அளவிடப்படுகின்றன. இக் கம்பனியின் முன்வைப்பு நாணயமான இலங்கை ரூபாவில் (LKR) நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆ) கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

கொடுக்கல் வாங்கல் திகதிகளில் நிலவிய அந்நியச் செலாவணி வீதங்களைப் பயன்படுத்தி அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களானவை தொழிற்பாட்டு நாணயமாக மாற்றப்படுகின்றன. அத்தகைய கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்வதிலிருந்தும் அத்துடன் வெளிநாட்டு நாணயங்களில் வெளிப்படுத்தப்படும் நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை ஆண்டிறுதி அந்நியச் செலாவணி வீதங்களில் மாற்றுவதிலிருந்தும் விளையப்பெறும் அந்நியச் செலாவணி இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

கடனழிவுக் கிரயத்திலான மாற்றங்களுடன் தொடர்புபட்ட மாற்ற வேறுபாடுகள் முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

2.1.5 தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனத்தின் முகாமையானது தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான இக்கம்பனியின் ஆற்றல் மதிப்பீடொன்றைச் செய்துள்ளதுடன் முன்னுணரக்கூடிய எதிர்காலத்திற்கு வியாபாரத்தைத் தொடர்வதற்கான வளங்களை இக் கம்பனி கொண்டுள்ளதென்பதில் திருப்திப்படுகின்றது. மேலும், தொடர்ந்து செல்லல்

எண்ணக்கரு ஒன்றாக தொடர்வதற்கான இக்கம்பனியின் ஆற்றல் மீது குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய ஏதேனும் பொருண்மையான நிச்சயமற்றதன்மைகள் பற்றி முகாமை அறிந்திருக்கவில்லை. ஆதலால், நிதிக் கூற்றுக்களானவை தொடர்ந்து செல்லல் எண்ணக்கரு அடிப்படையில் தொடர்ந்து தயாரிக்கப்படவுள்ளன.

2.1.6 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகளானவை இக் கம்பனியினால் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் ஒத்திசைவாக உள்ளன. நிகழாண்டின் முன்வைப்பிற்கு ஒத்திசைவதற்கு அவசியமானவிடத்தெல்லாம் முன்னைய ஆண்டின் இலக்கங்களும் சொற்றொடர்களும் மீள ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

2.1.7 மதிப்பீடுகளையும் திறனாய்வுத் தீர்வுகளையும் பயன்படுத்தல்

நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது சீராக்கங்களையும், எடுகோள்களையும் மற்றும் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட விடயங்களை அளவிடுவதில் எடுகோள்களைப் பயன்படுத்துவதையும் பணிப்பாளர்கள் மேற்கொள்வதற்கு தேவைப்படுத்துகின்றது. நிகழ்கால விடயங்கள் மற்றும் சூழ்நிலைகள் பற்றிய முகாமையின் அறிவையும் மற்றும் அத்தகைய அறிவினை அடிப்படையாகக் கொண்ட எடுகோள்களையும் அத்துடன் எதிர்கால நிகழ்வுகள் பற்றிய விதிவிலக்குகளையும் இக் கூற்றுக்கள் அடிப்படையாகக் கொண்டுள்ளன. அத்தகைய மதிப்பீடுகளிலிருந்து உண்மையான பெறுபேறுகள் எப்போதும் வேறுபடக்கூடும்.

2.1.8 பொருண்மை மற்றும் திரட்சி

சொத்துக்களும் பொறுப்புக்களும் அவற்றின் தன்மைக்கு ஏற்ப கூட்டானவை என்பதுடன் அவற்றின் ஒப்பீட்டுத் திரவத்தன்மையினை பிரதிபலிக்கும் ஓர் ஒழுங்கில் பட்டியற்படுத்தப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் - நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பில் விளங்கப்படுத்தப்பட்டவாறு மதிநுட்பம், பொருண்மை மற்றும் தோற்றப்பாட்டைக் காட்டிலும் சாரப்பொருள் (substance over form) தகுதிவிதிகளுக்கான உரிய கவனத்துடன் விசேடமாக வெளிப்படுத்தப்படும் நிலமைகளை விட, கணக்கீட்டுத் தத்துவங்கள் தொடர்ந்து பிரயோகிக்கப்படுகின்றன. பொருத்தமானவிடத்து, கணக்கீட்டுக் கொள்கைகளானவை அடுத்துவரும் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஈடாக்கப்படுவதுடன், கண்டறியப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கு சட்ட ரீதியில் அமுலாக்கக்கூடிய உரிமையொன்று காணப்படும் போதும், ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான, அல்லது சம நேரத்தில் சொத்துக்களை விற்றுக் காசாக்கி பொறுப்பினைத் தீர்ப்பனவு செய்வதற்கான உத்தேசமொன்று காணப்படும்

போதும் மாத்திரமே நிதி நிலமைக் கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படுகின்றது.

ஒத்த விடயங்களின் ஒவ்வொரு பொருண்மையான வகுப்பும் நிதிக் கூற்றுக்களில் வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன. மாறுபட்ட பண்பு அல்லது தொழிற்பாடொன்றைக் கொண்ட விடயங்களானவை பொருண்மையற்றதாக இருந்தாலொழிய வெவ்வேறாக முன்வைக்கப்பட்டுள்ளன.

2.2 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்புக்கான அடிப்படைகளும்

2.2.1 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

அ) கிரயம்

திரண்ட பெறுமானத் தேய்வையும் அத்துடன் / அல்லது கண்டறிதல் தகுதிவிதிகள் பூர்த்திசெய்யப்படின் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் உபகூறுப் பாகங்களை பதிலீடு செய்வதற்கான கிரயத்தையும் மற்றும் நீண்டகால நிர்மாணக் கருத்திட்டங்களுக்கான கடன்பெறல் கிரயங்களையும் உள்ளடக்கும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டங்கள் எவையேனுமிருப்பின் அவற்றையும் கழித்த கிரயத்தில் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன குறிப்பிடப்படுகின்றன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் முக்கியமான பாகங்கள் கால இடைவெளிகளில் பதிலீடு செய்யப்பட வேண்டியுள்ள போது, கம்பனியானது பதிலீடு செய்யப்படும் பாகத்தை கண்டறிதலிலிருந்து நீக்குவதுடன் புதிய பாகத்தை அதன் சொந்த இணைந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வுடன் சேர்த்து கண்டறிகின்றது.

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயற்றிறன் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நலன்களை மீளமைக்கும் அல்லது பேணும் பொருட்டு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் திருத்தங்கள் அல்லது பராமரிப்பு தொடர்பில் உறப்படும் செலவினமானது உறப்படும் வேளையில் செலவொன்றாக கண்டறியப்படுகின்றது.

ஆ) பெறுமானத்தேய்வு

பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது. இறையிலிக் காணிக்கு பெறுமானத் தேய்விடப்படுவதில்லை. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஏனைய சகல வகைகள் மீதும், அவற்றின் எதிர்பார்க்கப்படும் பயனுள்ள பொருளாதார ஆயுட்காலங்களைப் பயன்படுத்தி அவற்றின் கொண்டுசெல்லும் பெறுமதியினை பதிவழிக்கும் பொருட்டு பெறுமானத்தேய்வு அளிக்கப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

பிரதான சொத்துக்களிலிருந்து பௌதிக ரீதியில் வேறுபடுத்தப்படக்கூடியதும் முக்கியமான வெவ்வேறுபட்ட பயனுள்ள ஆயுட்காலத்தை கொண்டுள்ளதுமான சில உபகூறுகளை சொத்தொன்று கொண்டிருக்குமாயின், அவை வெவ்வேறாக கண்டறியப்பட வேண்டும் என்பதுடன் அவற்றின் உரிய பயனுள்ள ஆயுட்காலங்களின் அடிப்படையில் தேய்விடப்பட வேண்டும். பிரதான சொத்தின் மொத்தப் பெறுமதியில் குறிப்பிடத்தக்க கிரயமொன்றைக் கொண்டுள்ள உபகூறுகளினதும் அத்துடன் முக்கியமான வெவ்வேறுபட்ட பயனுள்ள பொருளாதார ஆயுட்காலங்களைக் கொண்டுள்ள உபகூறுகளினதும் அடிப்படையில் முக்கியமான உபகூறுகள் இனங்காணப்பட்டன.

பயனுள்ள ஆயுட்காலங்கள் பின்வருமாறு:

சொத்தின் வகுப்பு	**வீதம்**	**ஆண்டுகளின் எண்ணிக்கை**
கட்டடங்கள்	5%	20
கட்டடம் பகுதி பிரித்தல்	10%	10
பெயர்ப்பலகையும் பொருத்துகளும்	20%	5
கணனி உபகரணம்	25%	4
கணனி மென்பொருள்	25%	4
உபகரணம்	20%	5
அலுவலக உபகரணம்	20%	5
தளபாடமும் பொருத்துகளும்	20%	5
மோட்டார் வாகனங்கள்	20%	5
தொடர்பாடல் உபகரணம்	20%	5
CWE இலிருந்து மாற்றப்படும் சொத்துக்கள்	17.5%	5-6

சொத்துக்களின் பெறுமானத் தேய்வானது, அது பாவனைக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள போது ஆரம்பிக்கின்றது.

கடந்த வருடாந்த அறிக்கையிடல் திகதியிலிருந்து குறிப்பிடத்தக்க மாற்றமொன்று சுட்டிக்காட்டப்படுவதாக இருப்பின் சொத்துக்களின் எஞ்சியுள்ள பெறுமதிகளும், பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் பெறுமானத்தேய்வு முறைகள் என்பன மீளாய்வு செய்யப்படுகின்றன.

இ) மீளமைப்புக் கிரயங்கள்

ஆரம்பத்தில் மதிப்பிடப்பட்ட செயற்றிறன் நியமத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நலன்களை மீளமைக்கும் அல்லது பேணும் பொருட்டு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் திருத்தங்கள் அல்லது பராமரிப்பு தொடர்பில் உறப்படும் செலவினமானது உறப்படும் வேளையில் செலவொன்றாக கண்டறியப்படுகின்றது.

ஈ) கண்டறிதலை நீக்குதல்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் ஒரு வகையானது அகற்றலின் பேரில், அல்லது அதன் பாவனை அல்லது அகற்றலிலிருந்து எதுவித எதிர்கால பொருளாதார பயன்களும் எதிர்பார்க்கப்படாத போது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. அச் சொத்தின் கண்டறிதல் நீக்கத்தின் மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது தேறிய அகற்றல் ஆதாயத்திற்கும் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக கணிப்பிடப்படுகின்றது.

உ) நிதி சாராச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு (இருப்புகள் நீங்கலாக)

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கொண்டுசெல்லல் பெறுமதியானது வருடாந்தம், அல்லது கொண்டுசெல்லல் பெறுமதியை மீளப்பெற்றுக்கொள்ள முடியாது போகலாமென்பதை நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் சுட்டிக்காட்டும் போது, பெறுமதிக்குறைவின் பொருட்டு மீளாய்வு செய்யப்படுகின்றது. அத்தகைய ஏதேனும் சுட்டிக்காட்டல்கள் காணப்படுமாயின், அத்துடன் கொண்டுசெல்லல் பெறுமதிகளானவை மதிப்பிடப்பட்ட மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகைகளை விஞ்சியவிடத்து, சொத்துக்களானவை அவற்றின் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகைக்கு குறைக்கப்படுகின்றன. பெறுமதிக்குறைவு நட்டங்களானவை முழுமொத்த வருமானக் கூற்றுக்களில் கண்டறியப்படுகின்றன.

ஊ) மூலதன நடைபெறும் வேலை

கட்டடங்கள், பிரதான பொறித்தொகுதி மற்றும் உபகரணம் மற்றும் மூலதனமாக்கலுக்காக காத்திருக்கும் முறைமை அபிவிருத்தி என்பவற்றின் நிர்மாணத்தில் நேரடியாக உறப்படும் மூலதனப் பண்பொன்றைக் கொண்ட செலவுகளே இவையாகும். நிதி நிலமைக் கூற்றில் இவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன. இந்த ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டுள்ள மற்றும் பாவனைக்கு விடப்பட்டுள்ள மூலதனச் சொத்துகளானவை ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றுக்கு மாற்றப்பட்டுள்ளன.

2.2.2 அருவச் சொத்து

இக் கம்பனியின் அருவச் சொத்துக்களானவை கணனி மென்பொருள், அமுலாக்கம், வலையமைப்பு மற்றும் POS உரிமம் என்பவற்றின் பெறுமதியை உள்ளடக்குகின்றன.

அ) கண்டறிதல் அடிப்படை

ஒரு அருவச் சொத்தானது, அதன் கிரயம் நம்பகரமாக அளவிடப்படக்கூடியதாக உள்ள போது மாத்திரமே கண்டறியப்படுகின்றது என்பதுடன் அதன் காரணமாக ஏற்படும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார பயன்களானவை 'அருவச்

சொத்துக்கள்' பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 38 இற்கு இணங்க கம்பனிக்கு கிடைக்கக்கூடியதாகவிருக்கும் என்பது சாத்தியமாகின்றது.

வெவ்வேறாக கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களானவை ஆரம்ப கண்டறிதல் தொடர்பில் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. வியாபார சேர்க்கையொன்றில் கொள்ளல் செய்யப்படும் அருவச் சொத்துக்களின் கிரயமானது கொள்ளல் செய்யப்படும் திகதியிலுள்ளவாறு அவற்றின் நியாயப் பெறுமதியாக உள்ளது. ஆரம்ப கண்டறிதலைத் தொடர்ந்து, ஏதேனும் திரண்ட கடனழிவு மற்றும் ஏதேனும் திரண்ட பெறுமதிக்குறைவு நட்டங்கள் எவையேனும் இருப்பின் அவற்றைக் கழித்த கிரயத்தில் அருவச் சொத்துக்களானவை நிதி நிலமைக் கூற்றில் குறிப்பிடப்படுகின்றன.

ஆ) அடுத்துறும் செலவினம்

அருவச் சொத்துக்கள் மீதான அடுத்துறும் செலவினமானது, அது தொடர்புபடும் குறித்த சொத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்கால பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் போது மாத்திரமே மூலதனமாக்கப்படுகின்றது. ஏனைய சகல செலவினங்களும் உறப்படும் போதே செலவிடப்படுகின்றன.

இ) பயன்தரு பொருளியல் ஆயுட்காலங்கள், கடனழிவு மற்றும் பெறுமதிக்குறைவு

அருவச் சொத்துக்களின் பயன்தரு பொருளியல் ஆயுட்காலங்கள் ஒன்றில் வரையறுக்கப்பட்டதாக அல்லது வரையறுக்கப்படாததாக அமையுமாறு மதிப்பிடப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலத்துடன்கூடிய அருவச்சொத்துக்களானவை பயன்தரு பொருளியல் ஆயுட்காலத்தின் மீது கடனழிவு செய்யப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்துடன்கூடிய அருவச்சொத்து ஒன்றுக்கான கடனழிவு காலப்பகுதியும் கடனழிவு முறையும் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலேனும் மீளாய்வு செய்யப்படுகின்றன. சொத்தில் உள்ளடக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திலான அல்லது எதிர்காலப் பொருளாதாரப் பயன்களின் எதிர்பார்க்கப்பட்ட நுகர்வுப் பாங்கிலான மாற்றங்களானவை பொருத்தமானவாறு, கடனழிவுக் காலப்பகுதியை அல்லது முறையை மாற்றுவதன் மூலம் கணக்கிடப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்களாக அவை கருதப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட ஆயுட்காலங்களுடன்கூடிய அருவச்சொத்துக்கள் மீதான கடனழிவுச் செலவானது அருவச்சொத்தின் தொழிற்பாட்டிற்கு ஒத்திசைவாக செலவு வகுதியில் இலாப அல்லது நட்டக் கூற்றில் கண்டறியப்படுகின்றது. கீழே குறிப்பிடப்பட்டவாறான வீதங்களில் அருவச் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்தரு பொருளியல் ஆயுட்காலங்களின் மீது அவற்றின் எஞ்சியுள்ள பெறுமதிகளுக்கு அவற்றின் கிரயத்தைக் குறைப்பதற்கு நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி கடனழிவு கணிப்பிடப்படுகின்றது;

சொத்தின் வகை	வீதம்	ஆண்டுகளின் எண்ணிக்கை
கணனி மென்பொருள்	25%	4

ஈ) கண்டறிதலை நீக்குதல்

அருவச் சொத்துக்களானவை அகற்றலின் பேரில், அல்லது அதன் பாவனையிலிருந்து எதுவித எதிர்கால பொருளாதார பயன்களும் எதிர்பார்க்கப்படாத போது கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றது. அச் சொத்தின் கண்டறிதல் நீக்கத்தின் மீது எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டமானது (அச் சொத்தின் தேறிய அகற்றல் ஆதாயத்திற்கும் கொண்டுசெல்லல் பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடாக கணிப்பிடப்படும்) அச் சொத்து கண்டறிதலிலிருந்து நீக்கப்படும் ஆண்டில் இலாபம் அல்லது நட்டத்தில் கண்டறியப்படுகின்றது.

2.2.3 நிதி சாராச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதி முடிவிலும், கம்பனியானது அதன் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் கொண்டுசெல்லல் தொகைகளை, அச் சொத்துக்கள் பெறுமதி குறைந்துள்ளன என்னும் ஏதேனும் சுட்டிக்காட்டல் காணப்படுகின்றதா என்பதை நிர்ணயிக்கும் பொருட்டு, மீளாய்வு செய்கின்றது. அத்தகைய ஏதேனும் சுட்டிக்காட்டல் காணப்படுமாயின், பெறுமதிக்குறைவு நட்டத்தின் அளவினை நிர்ணயிக்கும் பொருட்டு அச் சொத்தின் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையானது மதிப்பிடப்படுகின்றது. தனிச் சொத்தொன்றின் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையினை மதிப்பிடுவதற்கு சாத்தியமற்றவிடத்து, கம்பனியானது காசு உருவாக்கல் அலகுகளை (CGUs) நிர்ணயிப்பதுடன் அச் சொத்துக்குரிய காசு உருவாக்கல் அலகுகளின் (CGUs) மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையினை மதிப்பிடுகின்றது.

விற்பதற்கான கிரயங்கள் கழித்த நியாயப் பெறுமதி மற்றும் பயன்பாட்டிலுள்ள பெறுமதி என்பவற்றில் உயர்வான பெறுமதியே மீளப்பெறக்கூடிய தொகையாகும். பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடுவதில், பணத்தின் காலப் பெறுமதியின் நிகழ்கால சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் மதிப்பீடுகள் சீராக்கப்பட்டிராத சொத்துக்குரிய இடர்களையும் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதமொன்றைப் பயன்படுத்தி, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களானவை அவற்றின் நிகழ்காலப் பெறுமதிக்கு கழிவிடப்படுகின்றன.

சொத்தொன்றின் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகையானது அதன் கொண்டுசெல்லல் தொகையினை விட குறைவாக இருக்குமாறு மதிப்பிடப்படின், அச் சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது அதன் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய தொகைக்கு குறைக்கப்படுகின்றது. பெறுமதிக்குறைவு நட்டமானது முழுமொத்த வருமானக் கூற்றில் உடனடியாகக் கண்டறியப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2.2.4 நிதியியல் சாதனங்கள் - ஆரம்பக் கண்டறிதலும் அடுத்துறும் அளவீடும்

2.2.4.1 நிதி சொத்துக்கள்

(அ) வகைப்படுத்தல்

இக் கம்பனியானது ஆரம்பக் கண்டறிதலில் அதன் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தலை நிர்ணயிப்பதுடன் 'கடன்களும் பெறத்தக்கவைகளும்' ஆக அதன் நிதிச் சொத்துக்களை வகைப்படுத்துகின்றது.

செயலூக்கமிக்க சந்தையொன்றில் விலைகூறப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கக்கூடிய கொடுப்பனவுகளுடனான பெறுதி அல்லாத நிதிச் சொத்துக்களே கடன்களும் பெறத்தக்கவைகளும் ஆகும். நடைமுறையல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும், அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவின் பின்னர் 12 மாதங்களுக்கும் கூடுதலான முதிர்வுக்காலத்திற்கானவற்றைத் தவிர, நடைமுறைச் சொத்துக்களில் கடன்களும் பெறத்தக்கவைகளும் உள்ளடக்கப்படுகின்றன.

(ஆ) கண்டறிதலும் ஆரம்ப அளவீடும்

'கடன்களும் பெறத்தக்கவைகளும்' ஆக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களானவை, இக் கம்பனி கொடுக்கல் வாங்கலை தொடக்கிய திகதியில் கண்டறியப்பட்டுள்ளன. நிதியியல் சாதனத்தின் ஒப்பந்த ஏற்பாட்டிற்கு ஒரு தரப்பாக இக் கம்பனி மாறும் வர்த்தக திகதியில் ஏனைய நிதிச் சொத்துக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

நிதிச் சொத்தொன்றானது, இலாபம் அல்லது நட்டத்திற்கூடான நியாயப் பெறுமதியில் சொத்துக்கள் காணப்படாத பட்சத்தில், நேரடிக் காரணமான கொடுக்கல்வாங்கல் செலவுகள் கூட்டி நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்படுகின்றது.

நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல்களைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகள் முடிவுற்றுள்ள அல்லது மாற்றப்பட்டுள்ள போது அத்துடன் கம்பனியானது நிதிச் சொத்துக்களின் உரிமைத்துவத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமானளவிற்கு மாற்றியுள்ள போது நிதிச் சொத்துக்கள் கண்டறிதலிலிருந்து நீக்கப்படுகின்றன.

(இ) அடுத்துறும் அளவீடு

I. கடன்களும் பெறத்தக்கவைகளும்

ஆரம்பக் கண்டறிதலைத் தொடர்ந்து, பெறுமதிக்குறைவிற்கான ஏற்பாட்டைக் கழித்து, பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களும் பெறத்தக்கவைகளும் அளவிடப்படுகின்றன.

(ஈ) நிதிச் சொத்துக்களின் பெறுமதிக் குறைவு

I. கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கொண்டு செல்லப்படும் சொத்துக்கள்

நிதிச் சொத்தொன்று பெறுமதி குறைகின்றது என்ற புறநிலைச் சான்று உள்ளதா என்று ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் இக் கம்பனி மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்பக் கண்டறிதலின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான நிகழ்வுகளின் (ஒரு "நட்ட நிகழ்வு") விளைவாக பெறுமதிக்குறைவின் புறநிலைச் சான்று இருந்தால் அத்துடன் அந்நட்ட நிகழ்வானது (அல்லது நிகழ்வுகளானவை) நம்பகரமாக மதிப்பிடப்படக்கூடிய நிதிச் சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் மீது தாக்கமொன்றைக் கொண்டிருந்தால் மாத்திரமே நிதிச் சொத்தொன்று பெறுமதி குறைந்து பெறுமதிக்குறைவு நட்டங்கள் உறப்படுகின்றன.

கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கொண்டுசெல்லப்படும் கடன்களும் பெறத்தக்கவைகளும் சார்பில், சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் நிதிச் சொத்தின் ஆரம்ப பயனுறுதி வாய்ந்த வட்டி வீதத்தில் கழிவிடப்பட்ட மதிப்பிடப்படும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நிகழ்காலப் பெறுமதிக்கும் (உறப்படாதுள்ள எதிர்கால கடன் நட்டங்கள் நீங்கலாக) இடையிலான வித்தியாசமாக நட்டத் தொகை அளவிடப்படுகின்றது. நிதிச் சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையானது குறைக்கப்பட்டு நட்டத் தொகையானது முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றது. அடுத்துவரும் காலப்பகுதி ஒன்றில், பெறுமதிக்குறைவு நட்டத் தொகை குறைவடைந்து அக் குறைவானது, பெறுமதிக்குறைவு கண்டறியப்பட்டதன் பின்னர் நிகழ்கின்ற ஒரு நிகழ்வுக்கு புறநிலையாக தொடர்புபடுத்தப்பட முடியுமாயின், முன்னர் கண்டறியப்பட்ட பெறுமதிக்குறைவு நட்டத்தின் எதிர்நிலை மாற்றமானது முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றது.

2.2.5 வியாபார வருமதிகள்

சாதாரண வியாபார நடவடிக்கையில் பொருட்களின் விற்பனை மற்றும் வழங்கப்பட்ட சேவைகள் சார்பில் வாடிக்கையாளர்களிடமிருந்து வரவேண்டிய தொகைகளே வியாபார வருமதிகளாகும். வியாபாரங்களின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் (ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதிக்குள்) சேகரிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் வருமதிகளானவை நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. வியாபார வருமதிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் (பட்டியற் பெறுமதியில்) கண்டறியப்படுவதுடன் அதன் பின்னர், வியாபாரங்களின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் நிலுவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு

எதிர்பார்க்கப்படுவதால் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு கழித்த ஆரம்ப பட்டியற் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

வியாபார வருமதிகள் பெறுமதி குறைகின்றன என்ற புறநிலைச் சான்று உள்ளதா என்று ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் இக் கம்பனி மதிப்பிடுகின்றது. கொடுப்பனவுகளைச் சேகரிப்பதில் கம்பனியின் கடந்தகால அனுபவம், கடன்படுநரின் குறிப்பிடத்தக்க நிதிசார் சிரமங்கள், கடன்படுநர் வகையற்றுப் போகும் சாத்தியப்பாடு மற்றும் தவணை தவறும் கொடுப்பனவுகள் என்பவற்றை வியாபார வருமதிகளுக்கான பெறுமதிக்குறைவின் புறநிலைச் சான்று உள்ளடக்குகின்றது. பெறுமதிக்குறைவிற்கான புறநிலைச் சான்று காணப்பட்டால் மாத்திரமே வியாபார வருமதிகள் பெறுமதி குறைக்கப்பட்டு பெறுமதிக்குறைவு நட்டங்கள் உறப்படுகின்றன. வியாபார வருமதிகள் பெறுமதிக்குறைவிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படுகின்றன.

2.2.6 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் அறிந்துவைத்த காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றப்படக்கூடியதும் பெறுமதி மாற்றங்களில் முக்கியமற்ற இடருக்கு உட்பட்டதுமான குறுங்கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பனவாக காசும் காசுக்குச் சமமானவையும் வரையறுக்கப்படுகின்றன.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, கையிலுள்ள காசையும் மற்றும் கேள்வியின் பேரில் மீள்செலுத்தத்தக்கதும் கம்பனியின் காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குவதுமான, நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்கள் கழித்த வங்கிகளிலுள்ள வைப்புகளையும் காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றது.

2.2.7 இருப்புகள்

இருப்புகளானவை கிரயம் மற்றும் தேறிய காசாக்கக்கூடிய பெறுமதி என்பவற்றில் குறைவானதில் பெறுமதியிடப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட காசாக்கல் கிரயம் அத்துடன் / அல்லது அவற்றின் நடைமுறையிலுள்ள நிலையிலிருந்து விற்பனைசெய்யக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கான செலவு என்பனவற்றைக் கழித்து சாதாரண வியாபார நடவடிக்கையில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய காசாக்கக்கூடிய பெறுமதியாகும். கிரயமானது நிறையளித்த சராசரி கிரய முறையினைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், அறிக்கையிடல் திகதியிலுள்ள இருப்புக்களின் விற்பனைப் பெறுமதிக்கு இலாப வீதத்தின் (profit margin) ஒரு பொதுவான சதவீதத்தைச் சீராக்கி இருப்புப் பெறுமதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

2.3 கூறப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் உரிமைமுதலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 அரசாங்க மானியங்கள்

நியாயப் பெறுமதியிலுள்ள பணம் சாராத மானியங்கள் உள்ளடங்கலாக அரசாங்க மானியங்களானவை, அவற்றுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் இக் கம்பனியால் இணக்கமுறப்பட்டு மானியங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படும் போது, கண்டறியப்படுகின்றன. நியாயப் பெறுமதியிலுள்ள பணம் சாராத மானியங்கள் உள்ளடங்கலாக சொத்துக்களுடன் தொடர்புபட்ட மானியங்களானவை, பிற்போடப்பட்ட வருமானமாக நிதி நிலமைக் கூற்றில் முன்வைக்கப்படுவதுடன் அச் சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தின் மீது ஒழுங்குமுறையானதும் நியாயமானதுமான ஓர் அடிப்படையில் வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன. வருமானத்துடன் தொடர்புபட்ட மானியங்களானவை, தொடர்புபட்ட செலவினத்தின் உறப்படலுக்கு எதிராக 'ஏனைய வருமானம்' எனும் தலைப்பின் கீழ் வருமானக் கூற்றில் வரவொன்றாக முன்வைக்கப்படுகின்றன.

2.5 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

2.5.1 பொறுப்புகள்

கேள்வியின் மீது செலுத்தத்தக்கதும் நிதி நிலமைக் கூற்றின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அமைவதுமானவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும் பொறுப்புகளாகும். நிதி நிலமைக் கூற்றின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புகளாகும்.

2.5.2 நிதிப் பொறுப்புகள்

இக் கம்பனியானது நிதிப் பொறுப்புகளை ஏனைய நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள், வட்டியினைத் தாங்கும் கடன்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் என்பவற்றை இக் கம்பனியின் ஏனைய நிதிப் பொறுப்புகள் உள்ளடக்குகின்றன. ஏனைய நிதிப் பொறுப்புகளானவை ஏதேனும் நேரடிக் காரணமான கொடுக்கல்வாங்கல் செலவுகள் சேர்த்து நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் கண்டறியப்படுகின்றன. ஆரம்பக் கண்டறிதலின் பின்னர், பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் இந் நிதிப்பொறுப்புகள் அளவிடப்படுகின்றன. நிதிப் பொறுப்பொன்றின் ஒப்பந்த கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது முடிவுறும் போது இக் கம்பனி அதனை கண்டறிதலிலிருந்து நீக்குகின்றது.

2.5.3 கடனழிவு செய்யப்பட்ட கிரய அளவீடு

ஒரு நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் கடனழிவு செய்யப்பட்ட கிரயமானது, கண்டறியப்பட்ட ஆரம்பத் தொகைக்கும் பெறுமதிக்குறைவிற்கான ஏதேனும் குறைவைக் கழித்த முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசம் தொடர்பில் பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி திரண்ட கடனழிவைக் கூட்டி அல்லது கழித்து, மூலதன மீள்செலுத்தல்களை கழித்து, ஆரம்பக் கண்டறிதலில் அந்த நிதிச் சொத்து அல்லது பொறுப்பு அளவிடப்படும் தொகையாக உள்ளது.

2.5.4 வியாபார சென்மதிகள்

சாதாரண வியாபார நடவடிக்கையில் வழங்குநர்களிடமிருந்து கொள்ளல் செய்யப்பட்டுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் சார்பில் செலுத்த வேண்டிய கடப்பாடுகளே வியாபார சென்மதிகளாகும். வியாபாரங்களின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் (ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதிக்குள்) கொடுப்பனவு நிலுவையாகவிருப்பின் வியாபார சென்மதிகளானவை நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இல்லையேல், அவை நடைமுறையல்லாப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

வியாபார சென்மதிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் (கொடுக்கல்வாங்கல் விலையில்) கண்டறியப்படுவதுடன் அதன் பின்னர், வியாபாரங்களின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் அவற்றை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால் கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

2.5.5 கடன்பெறல்கள்

தவணைக் கடன்களையும் இறக்குமதிக் கொடுகடன் கடன்களையும் இக் கம்பனியின் கடன்பெறல்கள் உள்ளடக்குகின்றன. கடன்பெறல்களானவை உறப்படும் கொடுக்கல்வாங்கல் செலவுகள் கழித்து நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் கண்டறியப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்பெறல்கள் பின்னர் கொண்டு செல்லப்படுகின்றன. அடுத்துவரும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அக் காலப்பகுதியில் நிலவும் தளம்பும் வட்டி வீதத்தை (பயனுறுதி வாய்ந்த வட்டிவீதம்) பயன்படுத்தி தளம்பும் வீத கடன்பெறல்கள் அளவிடப்படுகின்றன. கடன்பெறல்களின் கொடுக்கல்வாங்கல் செலவுகளாக சட்ட மற்றும் ஆவணமாக்கல் கட்டணங்கள் கண்டறியப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதி முடிவிலும் கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களின் கொண்டு செல்லல் பெறுமதி பற்றிய அளவீட்டிலிருந்து எழும் அந்நியச் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

எதிர்பார்க்கப்படுவதால் பெறுமதிக் குறைவிற்கான ஏற்பாடு கழித்த ஆரம்ப பட்டியற் பெறுமதியில் அளவிடப்படுகின்றன.

வியாபார வருமதிகள் பெறுமதி குறைகின்றன என்ற புறநிலைச் சான்று உள்ளதா என்று ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலும் இக் கம்பனி மதிப்பிடுகின்றது. கொடுப்பனவுகளைச் சேகரிப்பதில் கம்பனியின் கடந்தகால அனுபவம், கடன்படுநரின் குறிப்பிடத்தக்க நிதிசார் சிரமங்கள், கடன்படுநர் வகையற்றுப் போகும் சாத்தியப்பாடு மற்றும் தவணை தவறும் கொடுப்பனவுகள் என்பவற்றை வியாபார வருமதிகளுக்கான பெறுமதிக்குறைவின் புறநிலைச் சான்று உள்ளடக்குகின்றது. பெறுமதிக்குறைவிற்கான புறநிலைச் சான்று காணப்பட்டால் மாத்திரமே வியாபார வருமதிகள் பெறுமதி குறைக்கப்பட்டு பெறுமதிக்குறைவு நட்டங்கள் உறப்படுகின்றன. வியாபார வருமதிகள் பெறுமதிக்குறைவிற்காக தனித்தனியாக மதிப்பிடப்படுகின்றன.

2.2.6 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு, கேள்வி வைப்புகள் மற்றும் அறிந்துவைத்த காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றப்படக்கூடியதும் பெறுமதி மாற்றங்களில் முக்கியமற்ற இடருக்கு உட்பட்டதுமான குறுங்கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகள் என்பனவாக காசும் காசுக்குச் சமமானவையும் வரையறுக்கப்படுகின்றன.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, கையிலுள்ள காசையும் மற்றும் கேள்வியின் பேரில் மீள்செலுத்தத்தக்கதும் கம்பனியின் காசு முகாமைத்துவத்தின் இன்றியமையாத பகுதியொன்றை உருவாக்குவதுமான, நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்கள் கழித்த வங்கிகளிலுள்ள வைப்புகளையும் காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றது.

2.2.7 இருப்புகள்

இருப்புகளானவை கிரயம் மற்றும் தேறிய காசாக்கக்கூடிய பெறுமதி என்பவற்றில் குறைவானதில் பெறுமதியிடப்படுகின்றன. மதிப்பிடப்பட்ட காசாக்கல் கிரயம் அத்துடன் / அல்லது அவற்றின் நடைமுறையிலுள்ள நிலையிலிருந்து விற்பனைசெய்யக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கான செலவு என்பனவற்றைக் கழித்து சாதாரண வியாபார நடவடிக்கையில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையே தேறிய காசாக்கக்கூடிய பெறுமதியாகும். கிரயமானது நிறையளித்த சராசரி கிரய முறையினைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், அறிக்கையிடல் திகதியிலுள்ள இருப்புக்களின் விற்பனைப் பெறுமதிக்கு இலாப வீதத்தின் (profit margin) ஒரு பொதுவான சதவீதத்தைச் சீராக்கி இருப்புப் பெறுமதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
2017 டிசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

2.3 கூறப்பட்ட மூலதனம்

சாதாரண பங்குகள் உரிமைமுதலாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 அரசாங்க மானியங்கள்

நியாயப் பெறுமதியிலுள்ள பணம் சாராத மானியங்கள் உள்ளடங்கலாக அரசாங்க மானியங்களானவை, அவற்றுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் இக் கம்பனியால் இணக்கமுறப்பட்டு மானியங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என்னும் நியாயமான உறுதிப்பாடு காணப்படும் போது, கண்டறியப்படுகின்றன. நியாயப் பெறுமதியிலுள்ள பணம் சாராத மானியங்கள் உள்ளடங்கலாக சொத்துக்களுடன் தொடர்புபட்ட மானியங்களானவை, பிற்போடப்பட்ட வருமானமாக நிதி நிலமைக் கூற்றில் முன்வைக்கப்படுவதுடன் அச் சொத்தின் பயன்தரு ஆயுட்காலத்தின் மீது ஒழுங்குமுறையானதும் நியாயமானதுமான ஓர் அடிப்படையில் வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன. வருமானத்துடன் தொடர்புபட்ட மானியங்களானவை, தொடர்புபட்ட செலவினத்தின் உறப்படலுக்கு எதிராக 'ஏனைய வருமானம்' எனும் தலைப்பின் கீழ் வருமானக் கூற்றில் வரவொன்றாக முன்வைக்கப்படுகின்றன.

2.5 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

2.5.1 பொறுப்புகள்

கேள்வியின் மீது செலுத்தத்தக்கதும் நிதி நிலமைக் கூற்றின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அமைவதுமானவையே நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படும் பொறுப்புகளாகும். நிதி நிலமைக் கூற்றின் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு பின்னர் கொடுப்பனவிற்கு நிலுவையாகவுள்ள அம் மீதிகளே நடைமுறையல்லாப் பொறுப்புகளாகும்.

2.5.2 நிதிப் பொறுப்புகள்

இக் கம்பனியானது நிதிப் பொறுப்புகளை ஏனைய நிதிப் பொறுப்புகளாக வகைப்படுத்துகின்றது. வியாபார மற்றும் ஏனைய சென்மதிகள், வட்டியினைத் தாங்கும் கடன்கள் மற்றும் தொடர்புபட்ட தரப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் என்பவற்றை இக் கம்பனியின் ஏனைய நிதிப் பொறுப்புகள் உள்ளடக்குகின்றன. ஏனைய நிதிப் பொறுப்புகளானவை ஏதேனும் நேரடிக் காரணமான கொடுக்கல்வாங்கல் செலவுகள் சேர்த்து நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் கண்டறியப்படுகின்றன. ஆரம்பக் கண்டறிதலின் பின்னர், பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் இந் நிதிப்பொறுப்புகள் அளவிடப்படுகின்றன. நிதிப் பொறுப்பொன்றின் ஒப்பந்த கடப்பாடுகள் நிறைவேற்றப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது முடிவுறும் போது இக் கம்பனி அதனை கண்டறிதலிலிருந்து நீக்குகின்றது.

2.5.3 கடனழிவு செய்யப்பட்ட கிரய அளவீடு

ஒரு நிதிச் சொத்து அல்லது பொறுப்பின் கடனழிவு செய்யப்பட்ட கிரயமானது, கண்டறியப்பட்ட ஆரம்பத் தொகைக்கும் பெறுமதிக்குறைவிற்கான ஏதேனும் குறைவைக் கழித்த முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசம் தொடர்பில் பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி திரண்ட கடனழிவைக் கூட்டி அல்லது கழித்து, மூலதன மீள்செலுத்தல்களை கழித்து, ஆரம்பக் கண்டறிதலில் அந்த நிதிச் சொத்து அல்லது பொறுப்பு அளவிடப்படும் தொகையாக உள்ளது.

2.5.4 வியாபார சென்மதிகள்

சாதாரண வியாபார நடவடிக்கையில் வழங்குநர்களிடமிருந்து கொள்ளல் செய்யப்பட்டுள்ள பொருட்கள் அல்லது சேவைகள் சார்பில் செலுத்த வேண்டிய கடப்பாடுகளே வியாபார சென்மதிகளாகும். வியாபாரங்களின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் (ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதிக்குள்) கொடுப்பனவு நிலுவையாகவிருப்பின் வியாபார சென்மதிகளானவை நடைமுறைப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன. இல்லையேல், அவை நடைமுறையல்லாப் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

வியாபார சென்மதிகள் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் (கொடுக்கல்வாங்கல் விலையில்) கண்டறியப்படுவதுடன் அதன் பின்னர், வியாபாரங்களின் சாதாரண தொழிற்பாட்டு வட்டத்தில் அவற்றை செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதால் கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

2.5.5 கடன்பெறல்கள்

தவணைக் கடன்களையும் இறக்குமதிக் கொடுகடன் கடன்களையும் இக் கம்பனியின் கடன்பெறல்கள் உள்ளடக்குகின்றன. கடன்பெறல்களானவை உறப்படும் கொடுக்கல்வாங்கல் செலவுகள் கழித்து நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் கண்டறியப்படுகின்றன. பயனுறுதி வாய்ந்த வட்டி முறையினைப் பயன்படுத்தி கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்பெறல்கள் பின்னர் கொண்டு செல்லப்படுகின்றன. அடுத்துவரும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அக் காலப்பகுதியில் நிலவும் தளம்பும் வட்டி வீதத்தை (பயனுறுதி வாய்ந்த வட்டிவீதம்) பயன்படுத்தி தளம்பும் வீத கடன்பெறல்கள் அளவிடப்படுகின்றன. கடன்பெறல்களின் கொடுக்கல்வாங்கல் செலவுகளாக சட்ட மற்றும் ஆவணமாக்கல் கட்டணங்கள் கண்டறியப்படுகின்றன.

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதி முடிவிலும் கடனழிவு செய்யப்பட்ட கிரயத்தில் கடன்களின் கொண்டு செல்லல் பெறுமதி பற்றிய அளவீட்டிலிருந்து எழும் அந்நியச் செலாவணி இலாபங்களும் நட்டங்களும் முழுமொத்த வருமானக் கூற்றில் கண்டறியப்படுகின்றன.

2.5.6 நிதியியல் சாதனங்களை ஈடாக்குதல்

நிதிச் சொத்துக்களும் நிதிப் பொறுப்புக்களும் ஈடாக்கப்படுவதுடன், கண்டறியப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கு நடைமுறையில் அமுலாக்கக்கூடிய சட்ட உரிமையொன்று காணப்பட்டால், அத்துடன் ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கான, அல்லது சம நேரத்தில் சொத்துக்களை விற்றுக் காசாக்கி பொறுப்புகளைத் தீர்ப்பனவு செய்வதற்கான உத்தேசமொன்று காணப்பட்டாலே நிதி நிலமைக் கூற்றில் தேறிய தொகை அறிக்கையிடப்படுகின்றது.

2.6 வரிவிதிப்பு

2.6.1 நிகழ்கால வரி

அறிக்கையிடல் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது கணிசமானளவிற்கு சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பில் செலுத்தத்தக்க வரிக்கான ஏதேனும் சீராக்கம் என்பவற்றைப் பயன்படுத்தி, ஆண்டுக்கான வரிவிதிக்கக்கூடிய வருமானம் மீது செலுத்தத்தக்க அல்லது நட்டம் மீது பெற்றுக்கொள்ளத்தக்க, எதிர்பார்க்கப்படும் வரியே நிகழ்கால வரியாகும்.

2.6.2 ஏற்பாடுகள்

பொருளாதாரப் பயன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று கடப்பாட்டைத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படும் என்பதும் அத்துடன் கடப்பாட்டின் தொகை பற்றிய நம்பகரமான மதிப்பீடொன்று செய்யப்பட முடியும் என்பதும் சாத்தியப்படுமிடத்து, கடந்தகால நிகழ்வொன்றின் விளைவாக நிகழ்கால கடப்பாடொன்றை (சட்டம் மற்றும் அனுமானம் சார்ந்த) இக் கம்பனி கொண்டுள்ள போது ஏற்பாடுகள் கண்டறியப்படுகின்றன.

ஆரம்பத்தில், அறிக்கையிடல் திகதியில் கடப்பாட்டைத் தீர்ப்பதற்குத் தேவைப்படுத்தப்படும் தொகை பற்றிய மிகச் சிறந்த மதிப்பீட்டில் ஏற்பாடொன்று அளவிடப்படுகின்றது.

ஏற்பாடானது பெருமளவிலான உருப்படிக் கூட்டமொன்றை உள்ளடக்கும் போது, தொகையின் மதிப்பீடானது அவற்றின் இணைந்த சாத்தியப்பாடுகள் மூலம் சகல சாத்தியமான பயன்விளைவுகளின் நிறையிடலை பிரதிபலிக்கின்றது. ஏற்பாடானது தனித்த கடப்பாட்டிலிருந்து எழுகின்ற போது, மிகச் சிறந்த மதிப்பீடானது கூடுதல் சாத்தியமான பயன்விளைவாக இருக்கலாம்.

காலப் பெறுமதியின் விளைவானது பொருண்மையாக இருக்கும் பொழுது, பணத்தின் காலப் பெறுமதியின் நிகழ்கால சந்தை மதிப்பீடுகளையும் கடப்பாட்டுக்குரிய இடர்களையும் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய வீதமொன்றைப் பயன்படுத்தி, கடப்பாட்டைத் தீர்ப்பனவு செய்வதற்கு தேவைப்படுமென

எதிர்பார்க்கப்படும் தொகையின் நிகழ்காலப் பெறுமதியில் ஏற்பாடுகள் அளவிடப்படுகின்றன.

அடுத்துவரும் அளவீட்டில், ஓர் ஏற்பாடானது ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட அச் செலவினங்களுக்கு எதிராக மாத்திரமே அவ் ஏற்பாடு சாட்டுதல் செய்யப்படுகின்றது.

2.6.3 ஊழியர் பயன்கள்

இக் கம்பனியானது வரையறுக்கப்பட்ட பயன் மற்றும் வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் ஆகிய இரண்டையுமே கொண்டுள்ளது.

அ) வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் தொடர்பான கம்பனியின் கடப்பாடானது அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதியாகும். வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாடானது எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு முறையைப் பயன்படுத்தி சுயாதீனமான இடர் கணிப்பீட்டாளர்களினால் கணிப்பீடு செய்யப்படுகின்றது. நிகழ்கால மற்றும் முன்னைய காலப்பகுதியில் ஊழியர்கள், தமது சேவைகளுக்கு பிரதிபலனாக ஈட்டியுள்ள மதிப்பிடப்பட்ட எதிர்காலப் பயனை கழிவிடுவதன் மூலம் வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் நிகழ்காலப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது.

அனுபவ ரீதியான சீராக்கங்கள் மற்றும் இடர் கணிப்பீடுசார் எடுகோள்களிலான மாற்றங்கள் என்பவற்றிலிருந்து எழுகின்ற இடர் கணிப்பீடுசார் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன அவை எழுகின்ற காலப்பகுதியில் ஏனைய முழுமொத்த வருமானத்தில் உரிமைமுதலுக்கு சாட்டுதல் செய்யப்படுகின்றன அல்லது வரவு வைக்கப்படுகின்றன.

அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் நிர்ணயிக்கப்படும் தொகையிலிருந்து நிதிக் கூற்றுக்களில் கண்டறியப்பட்ட தொகைகளானவை பொருண்மையுடையதாக வேறுபடும் போது வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டை கம்பனி மீள அளவிடும்.

கடந்தகால சேவைக் கிரயங்கள் முழுமொத்த வருமானக் கூற்றில் உடனடியாக கண்டறியப்படுகின்றன.ஓய்வுபெறல் பயன் கடப்பாடானது வெளிவாரியாக நிதியீட்டம் செய்யப்படுவதில்லை.

ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

கம்பனியானது புறம்பான நிறுவனமொன்றாக நிலையான பங்களிப்புகளை செலுத்துகின்ற தொழிலுக்குப் பின்னரான பயன் திட்டமொன்றே வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டமாகும். கம்பனியானது மேலதிக

பங்களிப்புகளை செலுத்துவதற்கான சட்ட அல்லது அனுமான கடப்பாடுகள் எவற்றையும் கொண்டிருக்கவில்லை. பங்களிப்புகள் நிலுவையாகவுள்ள போது ஊழியர் பயன் செலவாக கண்டறியப்படுகின்றன.

ஊழியரின் மொத்த ஊதியத்தில் 12% ஐ ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) ஊழியரின் மொத்த ஊதியத்தில் 3% ஐ ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் (ETF) கம்பனி பங்களிப்புச் செய்கின்றது.

இ) குறுங்கால ஊழியர் பயன்

ஊழியர்களினால் வழங்கப்பட்ட தொடர்புபட்ட சேவைகளுக்காக செலுத்தப்பட எதிர்பார்க்கப்படும் கழிவிடப்படாத தொகையொன்றின் பேரில் குறுங்கால ஊழியர் பயன் கடப்பாடுகள் அளவிடப்படுகின்றன.

2.7 முழுமொத்த வருமானக் கூற்று

2.7.1 வருமானம் கண்டறிதல்

கொடுப்பனவு செய்யப்படுவது எப்போது என்பதைக் கருத்திற்கொள்ளாது, பொருளாதாரப் பயன்கள் கம்பனிக்கு கிடைக்கப்பெறும் என்பதும் வருமானம் நம்பகரமாக அளவிடப்பட முடியும் என்பதும் சாத்தியப்படக்கூடியதாகவுள்ள அளவிற்கு வருமானம் கண்டறியப்படுகின்றது. ஒப்பந்த ரீதியில் வரையறுக்கப்பட்ட கொடுப்பனவு நியதிகளை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு, வருவாய்கள் மற்றும் படிகள், வியாபாரக் கழிவுகள் மற்றும் மொத்தக் கழிவுகள் என்பன கழித்து, பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய கொடுப்பனவின் நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது.

அ) பொருட்களின் விற்பனை

வருவாய்கள், வியாபாரக் கழிவுகள் மற்றும் மொத்தக் கழிவுகள் என்பன கழித்து, பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளக்கூடிய கொடுப்பனவின் நியாயப் பெறுமதியில் சாதாரண செயற்பாட்டு நடவடிக்கையில் பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் அளவிடப்படுகின்றது. வழமையாக பொருட்களை விநியோகித்தலின் பேரில், பொருட்களின் உரிமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க இடர்களும் வெகுமதியும் வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்டுள்ள போது பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் கண்டறியப்படுகின்றது.

ஆ) வட்டி வருமானம்

வட்டி வருமானம் அட்டுறுகின்ற படியால் இலாபம் அல்லது நட்டத்தில் அது கண்டறியப்படுவதுடன் பயனுறுதிவாய்ந்த வட்டிவீத முறையினைப் பயன்படுத்தி கணிப்பிடப்படுகின்றது.

இ) வாடகை வருமானம்

மேலதிக தள இடப்பரப்பை குத்தகைக்கு விடுவதிலிருந்து எழும் வாடகை வருமானமானது தொழிற்பாட்டு குத்தகை நியதிகளின் மீது நேர்கோட்டு அடிப்படையில் வருமானமாக கண்டறியப்படுகின்றது.

ஈ) ஏனைய வருமானம்

ஏனைய வருமானம் அட்டுறு அடிப்படையில் கண்டறியப்படுகின்றது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் அத்துடன் முதலீடுகள் உள்ளடங்கலான ஏனைய நடைமுறையல்லாச் சொத்துக்கள் என்பவற்றின் அகற்றலின் மீதான தேறிய இலாபங்களும் நட்டங்களும், அகற்றலின் மீதான ஆதாயத்திலிருந்து சொத்துக்களின் கொண்டு செல்லல் தொகையும் தொடர்புபட்ட விற்பனைச் செலவுகளும் கழிக்கப்பட்டு, இலாபம் அல்லது நட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ளன.

2.7.2 செலவினம் கண்டறிதல்

உறப்படும் செலவிற்கும் குறித்த வருமான வகைகளின் உழைப்பிற்கும் இடையிலான நேரடி இணைப்பொன்றின் அடிப்படையில் முழுமொத்த வருமானக் கூற்றில் செலவுகள் கண்டறியப்படுகின்றன. வியாபாரத்தை நடாத்திச் செல்வதிலும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றை வினைத்திறனான நிலமையில் பேணுவதிலும் உறப்படும் சகல செலவினங்களும் ஆண்டுக்கான இலாபத்தை எட்டும் வருமானத்திற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.

முழுமொத்த வருமானக் கூற்றின் முன்வைப்பு நோக்கத்திற்காக, செலவின முறையின் தொழிற்பாடானது கம்பனியின் செயற்றிறன் கூறுகளை நியாயமாக முன்வைப்பதுடன், அதன் காரணமாக அத்தகைய முன்வைப்பு முறையானது பின்பற்றப்பட்டுள்ளது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாக உள்ளது.

2.8 காசுப் பாய்ச்சல் கூற்று

செயற்பாட்டு நடவடிக்கைகள், முதலீட்டு நடவடிக்கைகள் மற்றும் நிதி நடவடிக்கைகள் என்பன வெவ்வேறாக கண்டறியப்படும், 'காசுப் பாய்ச்சல் கூற்று' பற்றிய இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 7 என்பதற்கிணங்க காசுப் பாய்ச்சல்களைத் தயாரிக்கும் 'மறைமுக முறையினை' பயன்படுத்தி காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. அறிந்துவைத்த காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றப்படக்கூடியதும் பெறுமதி மாற்றங்களில் முக்கியமற்ற இடருக்கு உட்பட்டதுமான குறுங்கால உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகளை காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்குகின்றன. குறிப்பு 22 இல் விளங்கப்படுத்தப்பட்டவாறான அவ் விடயங்களை காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டவாறான காசும் காசுக்குச் சமமானவையும் உள்ளடக்கியுள்ளன.

2.9 தொடர்புபட்ட தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

விலை அறவிடப்படுகின்றதா அல்லது இல்லையா என்பது பற்றிக் கருத்திற்கொள்ளாமல், மற்றய தரப்பின் நிதி மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகள் / தீர்மானங்களை கட்டுப்படுத்துவதற்கான அல்லது அவற்றின் மீது குறிப்பிடத்தக்க செல்வாக்கினைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலை ஒரு தரப்பானது கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது. உரிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் சம்பந்தப்பட்ட குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

2.10 அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவின் பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் நிகழும் சகல பொருண்மையான நிகழ்வுகளும் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அவசியமானவிடத்து, கணக்குகளுக்கான சம்பந்தப்பட்ட குறிப்புகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

2.11 எதிர்பாரா நிகழ்வுகளும் கண்டறியப்படாத ஒப்பந்தக் கடப்பாடுகளும்

அறிந்துவைத்த சகல பொறுப்புக்களினதும் தொகையினை நிர்ணயிப்பதில் சகல கண்டறியக்கூடிய இடர்களும் கணக்கிடப்பட்டுள்ளன. பொருளாதாரப் பயனின் மாற்றமான சாத்தியமற்றதாக அல்லது நம்பகரமாக அளவிடப்பட முடியாததாக உள்ளவிடத்து நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளினால் அல்லது நிகழ்காலக் கடப்பாடுகளினால் மாத்திரம் அவற்றின் இருப்புநிலை உறுதிப்படுத்தப்படும் சாத்தியமான கடப்பாடுகளே எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புகளாகும்.எதிர்பாரா நிகழ்வுப் பொறுப்புகள் நிதி நிலமைக் கூற்றில் கண்டறியப்படுவதில்லை, ஆனால் நிதிக் கூற்றுக்களுடனான சம்பந்தப்பட்ட குறிப்புகளில் வெளிப்படுத்தப்படுகின்றன.

3. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் திறனாய்வுத் தீர்வுகளும்

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது, சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பவற்றைக் கண்டறிதல் மற்றும் அளவிடுதல் பற்றிய பல திறனாய்வுத் தீர்வுகளையும், மதிப்பீடுகளையும் எடுகோள்களையும் முகாமை மேற்கொள்கின்றது.

3.1. நிதிக் கூற்றுக்களின் மீது கூடுதல் முக்கியமான விளைவைக் கொண்டுள்ள, கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதில் முக்கியமான திறனாய்வுத் தீர்வுகளாக பின்வருவன உள்ளன.

அ. பெறுமானத் தேய்விடக்கூடிய சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம்

சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதாரப் பயன் அடிப்படையில், ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் பெறுமானத் தேய்விடக்கூடிய சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் பற்றிய அதன் மதிப்பீட்டை முகாமை மீளாய்வு செய்கின்றது. சில மென்பொருட்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப (IT)

உபகரணங்களின் பயனை மாற்றக்கூடிய தொழில்நுட்ப வழக்கற்றுப்போதலுடன் இம் மதிப்பீடுகளின் நிச்சயமற்ற தன்மைகள் தொடர்புறுகின்றன.

ஆ. வரையறுக்கப்பட்ட பயன் திட்டம்

வரையறுக்கப்பட்ட பயன் திட்டக் கடப்பாடுகளின் நிகழ்காலப் பெறுமதியானது பல எடுகோள்களைப் பயன்படுத்தும் இடர் கணிப்பீடுசார் விலைமதிப்பு முறையில் நிர்ணயிக்கப்படும் பல காரணிகளில் தங்கியுள்ளது. குறிப்பு 23 இல் வெளிப்படுத்தப்பட்ட கழிவு வீதம் உள்ளடங்கலாக வரையறுக்கப்பட்ட பயன் திட்டத்திற்கான தேறிய செலவு மற்றும் கடப்பாடு என்பவற்றை நிர்ணயிப்பதில் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் எடுகோள்களிலான ஏதேனும் மாற்றங்களானவை வரையறுக்கப்பட்ட பயன் கடப்பாட்டின் கொண்டு செல்லல் தொகையினை பாதிக்கும்.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

(இலங்கை ரூபாக்களில்)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	2017	2016
4 வருமானம்			
தன்னியக்க கிளைகளில் வருமானம்			
பலசரக்குப் பொருட்கள்		2,830,926,284	2,964,974,120
உணவுப் பொருட்கள்		5,415,908,771	5,164,648,195
மதுபானம்		2,371,277,711	2,275,311,587
மேம்படுத்தல் பொருட்கள்		992,474,872	1,028,666,990
வீட்டுப் பாவனைப்பொருட்கள்		386,877,705	449,113,710
காகிதாதிகள்		5,173,871	4,883,920
		12,002,639,215	**11,887,598,522**
கைகளால் இயக்கும் கிளைகளில் வருமானம்	**4.1**	17,660,801,434	18,095,286,355
மொத்த வருமானம்		**29,663,440,649**	**29,982,884,877**
தேசிய மீள் கட்டமைப்பு வரி (NBT)		(52,028,369)	-
		29,611,412,280	**29,982,884,877**

4.1 கையேடு விற்பனை நிலையங்களின் வருவாயை விற்கப்பட்ட பொருட்களின் அடிப்படையில் வகைப்படுத்த முடியாது ஆயினும் கூட விற்கப்பட்ட பொருட்களுக்கான ரசீதுகளின் முழு நீரோட்டமும் பண விற்பனை அட்டை விற்பனை பரிசு வவுச்சர் விற்பனை மற்றும் கடன் விற்பனை ஆகியவை அடங்கும்.

5 விற்பனைக்கான செலவுகள்			
ஜனவரி 01 இல் இருப்பு		3,975,959,505	7,353,860,990
கொள்வனவும் ஏனையவையும்		27,428,581,523	25,703,186,543
		31,404,541,028	**33,057,047,533**
கொள்வனவு திரும்பல்கள்		(59,559,520)	(89,604,281)
டிசம்பர் 31 இல் இருப்பு	**5.1**	(4,295,373,354)	(3,975,959,505)
		27,049,608,154	**28,991,483,747**

5.1 முடிவு இருப்புகள்

அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் மதிப்பீடுகளின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கான கட்டுப்பாட்டு நடவடிக்கையாக சரக்கு நிலுவைகள் முதலில் விற்பனை விலையில் மதிப்பிட்டுள்ள மற்றும் சராசரி இலாப வரம்புகளை அகற்றுவதன் மூலம் செலவுக்கு வர சரி செய்யப்படுகின்றன.

6 இருப்பு பற்றாக்குறை மற்றும் ஏனைய இருப்பு இழப்புகள்			
இறக்குமதி செய்யப்பட்ட அரிசிக்கான NRV சீராக்கல்		-	932,128,553
தற்காலிக இருப்பு இழப்புகள்		75,200,459	379,701,902
இருப்பு இழப்பு / விரயம் (ஆய்வுச் சபையால்)		321,406,670	10,994,447
		396,607,129	**1,322,824,902**

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச

நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

(இலங்கை ரூபாக்களில்)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	2017	2016
7 ஏனைய வருமானம்			
கொண்டோலா வருமானம்		106,833,500	126,460,500
விற்பனை மேம்படுத்தல்		36,371,530	11,173,809
அழிவுமீட்பு வருமானம்		6,872,693	4,284,168
பொதுவான தொகுதி அகற்றல் (மரக்கறிகள்)		1,250,046	1,079,444
காப்புறுதிக் கோரிக்கை		27,988,008	14,006,152
நானாவித வருமானம்		10,462,067	6,415,471
போக்குவரத்து வருமானம்		110,557,365	43,256,106
பதிவுக் கட்டண வருமானம்		2,156,417	10,409,500
தண்டப்பண வருமானம்		10,665,643	5,248,024
பட்டியலிடல் கட்டண வருமானம்		1,550,000	801,543
ஊழியர்களிடமிருந்து மீட்பு		1,338,997	178,225
இடமாற்றலில் இழப்பு		963,817	697,199
வாடகை வருமானம்		2,402,596	1,111,250
மீள எழுதப்பட்ட மீதிகள்		3,369,267	10,735,872
வணிக திட்ட வருமானம்	7.1	10,800,000	-
வழங்குநர் கழிவுகள்		17,644,961	9,268,309
தரகு வருமானம்		2,381,712	377
பின்போடப்பட்ட வருமானத்தின் பதிவழிப்பு - மூலதன நன்கொடை		367,575,495	110,664,984
		721,184,115	**355,790,933**

7.1 மளிகை சில்லறை வணிகங்களில் தங்கள் தளாரிப்புகளில் செய்த பங்களிப்புக்காக யூனிலீவர் இலங்கை லிமிடட் நிறுவனத்திற்கு வெகுமதி அளிக்கும் முயற்சியின் விளைவாக வருமானம் பெறப்படுறது. ஊக்கத்தொகை 2017 அக்டோபர் 01 முதல் 2017 டிசம்பர் 31 வரை அமுல்படுத்தப்பட்டது.

8 நிர்வாகச் செலவுகள்		
சம்பளங்கள் - முகாமைத்துவ, நிறைவேற்று மற்றும் எழுதுவினைஞர்	259,907,514	86,110,109
ஊழியர் சேமலாப நிதியம்	22,667,738	18,068,431
ஊழியர் நம்பிக்கை நிதியம்	5,745,597	4,421,545
பணிப்பாளர் கட்டணங்கள்	860,000	1,035,000
வருடாந்த விடுமுறைக் கட்டணங்கள்	37,123,530	25,066,050
வாழ்க்கைச் செலவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்	705,569,020	824,082,551
உணவுக் கொடுப்பனவுகள்	10,663,515	8,737,758
கணக்காய்வுக் கட்டணமும் செலவுகளும்	2,000,000	2,000,000
கட்டிட திருத்தமும் பராமரிப்பும்	22,412,038	5,675,703
உபகரண பராமரிப்பு	27,227,199	17,830,879
கணனி மற்றும் மென்பொருள் பராமரிப்பு	3,958,171	15,665,382
அமைய ஊதியங்கள்	163,691,546	119,983,177
சுத்தப்படுத்தல் செலவுகள்	4,029,495	2,753,962
தேய்மானம்	295,914,911	231,287,124
அருவச் சொத்துகளின் பதிவழிப்பு	10,164,253	6,541,942
பணிக்கொடை	29,994,556	24,646,179
நன்கொடைகள்	465,000	1,831,733
மின்சாரம்	174,002,089	158,930,957
அனுமதிக் கட்டணங்கள்	17,117,248	17,252,484
பீடை கட்டுப்பாடு	1,516,387	1,382,761
சேவை ஒப்பந்தக் கட்டணங்கள்	19,098,711	6,953,158
ஒப்பந்த ஊதியங்களும் பொதிசேவைக் கட்டணங்களும்	2,905,460	1,125,653
CWE இற்கான உரிமத்தொகை (மதுபான அனுமதி)	11,320,056	11,320,056
எரிபொருள் கட்டணங்கள்	5,752,284	4,523,142
காப்புறுதி	27,231,973	22,351,344
அலைபேசி கட்டணங்கள்	597,261	1,490,690
அளவை கட்டணங்கள்	151,230	456,508
துணைக்கட்டணங்கள்	22,894	4,914
மருத்துவ செலவுகள்	274,863	129,337
அலுவலக உபகரணங்கள் பீழுது செலவுகள்	814,711	675,530
வேறு செலவுகள்	911,329	1,363,159
மிகுதி நேரம்	122,628,653	119,924,025
சட்டரீதியான கட்டணம்	1,379,064	2,437,900
வாகன திருத்தமும் பராமரிப்பும்	622,101	1,711,158
மீதி மு.கொ.செ	**1,988,740,395**	**1,747,770,302**

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

(இலங்கை ரூபாக்களில்)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக		2017	2016
	மீதி மு.கொ.வ	**1,988,740,395**	**1,747,770,302**
	நீர் செலவுகள்	10,199,135	9,222,896
	தண்டங்களும் மேலதிக கட்டணங்களும்	561,597	1,139,676
	தபால் கட்டணம்	203,703	195,287
	ஊழியர் பயிற்சி	614,072	360,587
	நிபுணத்துவ கட்டணங்கள்	83,276,156	45,121,284
	செயலக கட்டணம்	561,565	-
	காகிதாதிகள்	25,435,629	29,560,390
	பிழைப்புப் படி	3,572,891	3,265,453
	முத்திரைக் கட்டணங்கள்	273,203	82,806
	தொலைபேசி மற்றும் இணையம்	60,857,182	39,483,910
	தண்டங்கள்	992,284	1,610,576
	கூட்டங்களுக்கான செலவுகள்	3,999,191	2,215,248
	வாகன வாடகை	3,561,033	1,229,000
	தேநீர் செலவுகள்	26,252,334	9,455,073
	பத்திரிகைகள்	26,440	51,250
	வங்கிக் கட்டணங்களும் தரகுகளும்	38,420,959	31,307,855
	நீக்குவதற்கான குற்றச்சாட்டுக்கள்	49,955	-
	அனுமதிக்கப்படாத உள்ளீட்டு வரி - VAT	78,622,306	-
	மரணம் மற்றும் விபத்து நலநிதி கொடுப்பனவுகள்	250,000	50,000
		2,326,470,029	**1,922,121,591**
9	**விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள்**		
	சம்பளங்கள்	508,691,129	438,903,048
	ஊழியர் சேமலாப நிதியம்	99,213,397	85,496,241
	ஊழியர் நம்பிக்கை நிதியம்	24,725,438	21,374,488
	விளம்பர செலவுகள்	32,333,204	14,283,224
	மிகைச் சம்பளம்	62,994,260	37,473,481
	நுகர்வுப்பொருள் களஞ்சிய கட்டணங்கள்	21,255,742	3,035,486
	பலசரக்கு பைகள்	129,192,470	221,194,250
	பொதிசெய்தல் கட்டணங்கள்	9,592,040	8,563,937
	பொதிசெய்தல் கட்டணங்கள்	78,316	127,865
	அச்சிடல் செலவுகள்	43,576,941	28,570,089
	மேம்படுத்தல் செலவுகள்	1,476,384	-
	வாடகை	515,347,534	478,037,305
	விற்பனைக் கழிவுகள்	1,801,338	3,677,231
	பாதுகாப்பு கட்டணங்கள்	181,498,713	168,096,779
	போக்குவரத்து கட்டணங்கள்	333,715,983	309,925,579
	போக்குவரத்து	6,141,580	3,902,520
	ஊழியர் நலன்புரி	5,594,249	111,038
	லொறி சீல் செலவுகள்	1,454,200	2,652,962
	திறப்புவிழா செலவுகள்	2,598,507	1,273,629
	அலங்கரிப்பு செலவுகள்	1,119,827	562,094
	வியாபார வரி கட்டணங்கள்	748,862	825,516
		1,983,150,114	**1,828,086,762**

வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

(இலங்கை ரூபாக்களில்)

டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்காக	குறிப்பு	2017	2016
10 சேதத்திற்கான ஏற்பாடுகள்			
செலுத்துகையின் கீழ் தீர்க்கப்படாததற்கு	**19.5**	6,762,337	50,000,000
சட்டபூர்வமான வருமதிகளுக்கு		-	12,932,944
		6,762,337	**62,932,944**
11 தேறிய நிதி செலவுகள்			
வட்டி செலவுகள்			
வங்கிக்கடன் மீதான வட்டி		1,424,532,747	1,364,376,909
		1,424,532,747	**1,364,376,909**
வட்டி வருமானங்கள்			
நிலையான வைப்பு மற்றும் சேமிப்பிலிருந்து வட்டி		(80,853,524)	(23,112,527)
		(80,853,524)	**(23,112,527)**
		1,343,679,223	**1,341,264,382**

12 வருமான வரி செலவுகள்

2011 இலிருந்து திருத்தப்பட்ட 2006 இல. 10 வருமான வரிச் சட்டத்தின் 07(h) பிரிவின் கீழ் வருமான வரி விலக்களிக்கப்பட்டுள்ளது.

2018 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து 28மூ வருமான வரிக்குட்படுத்தப்பட்டுள்ளது.

13 பங்குக்கான அடிப்படை சம்பாத்தியம் / (இழப்பு) (ரூபா)			
தொகுதி எண்ணாக பயன்படுத்தப்பட்ட தொகை			
மூலதன உரிமையாளர்களுக்கு உடமையாகத்தக்கது (ரூபா)		(2,773,680,592)	(5,130,038,518)
பகுதி எண்ணாக பயன்படுத்தப்பட்டபங்குகளின் எண்ணிக்கை			
வழங்கப்பட்ட நிறையளிக்கப்பட்ட சராசரி பங்குகளின் எண்ணிக்கை (எண்)		89,375,272	89,375,272
பங்குக்கான அடிப்படை சம்பாத்தியம் / (இழப்பு) (ரூபா)		**(31.03)**	**(57.40)**

பங்குக்கான அடிப்படை சம்பாத்தியம் / (இழப்பு) மூலதன உரிமையாளர்களுக்கு உடமையாகத்தக்கதான இலாபம் / நட்டத்தை அறிக்கையிடும் காலத்தில் வழங்கப்பட்ட நிறையளிக்கப்பட்ட சராசரி சாதாரண பங்குகளின் எண்ணிக்கையால் பிரிப்பதன் மூலம் கணிப்பிடப்படுகின்றது.

(இலங்கை ரூபாக்களில்)

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

14 உடமை, இயந்திரங்கள், உபகரணங்கள்

செலவு	கட்டிடங்கள்	பெயர்ப்பலகைகளும் பொருத்துகளும்	கணனி உபகரணங்கள்	கணனி வன்பொருள்	உபகரணங்கள்	அலுவலக உபகரணங்கள்	தளபாடங்களும்/பொருத்துகளும்	வாகனங்கள்	தொலைத் தொடர்பு உபகரணங்கள்	CWE இன் சொத்துகள்	மொத்தம்
2016 ஜனவரி 01 இல் மீதி	**444,100,663**	**122,156,531**	**172,355,337**	**133,360,886**	**338,443,298**	**352,272,093**	**236,604,176**	**18,821,440**	**3,642,602**	**22,798,843**	**1,844,555,869**
இவ் வருடத்தில் மேலதிகமாக	-	9,704,909	26,419,803	1,754,280	190,175,543	-	6,789,055	-	-	-	234,843,590
2016 டிசம்பர் 31 இல் மீதி	**444,100,663**	**131,861,440**	**198,775,140**	**135,115,166**	**528,618,841**	**352,272,093**	**243,393,231**	**18,821,440**	**3,642,602**	**22,798,843**	**2,079,399,460**
இவ் வருடத்தில் மேலதிகமாக	-	13,076,319	19,695,030	107,469,850	677,779,583	97,762	32,663,256	-	-	-	850,781,800
Disposal / Transfers	-	-	-	29,985,989	59,312,971	(42,762)	-	-	-	-	89,256,198
2017 டிசம்பர் 31 இல் மீதி	**444,100,663**	**144,937,759**	**218,470,170**	**272,571,005**	**1,265,711,395**	**352,327,093**	**276,056,487**	**18,821,440**	**3,642,602**	**22,798,843**	**3,019,437,457**
தேய்மானம்											
2016 ஜனவரி 01 இல் மீதி	**37,301,743**	**44,898,760**	**147,999,370**	**42,439,697**	**143,235,154**	**297,122,236**	**196,185,564**	**18,687,220**	**3,642,601**	**22,798,841**	**954,311,186**
வருடத்திற்கான கட்டணம்	22,909,669	22,922,881	31,035,022	27,356,510	72,899,665	16,566,917	37,465,282	131,178	-	-	231,287,124
